**கவனிக்க.-** *2024.07.19 ஆந் திகதிய 2394 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அංක 2395 - 2024 ජූලි මස 26 වැනි සිකුරාදා - 2024.07.26

*2395 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1660 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1672 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, ஓகத்து மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, ஓகத்து மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024, ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1657-B 82592-5,441 (2024/07)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலுாவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ் மொழி மூலம் பிறப்பு, இறப்பு மற்றும் விவாக பதிவாளர் பதவி - மன்னார் மாவட்டம்

*இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.*

*2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.*

*3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது வருடங்கள் 30 இற்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை வயது வருடங்கள் 70 ஆகும்.)*

*4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.*

*5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழில் சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.*

**கருத்திற் கொள்ளவும்.**- *க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.*

*6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.*

*7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.*

*8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும்* (www.rgd.gov.lk) *பெற்றுக்கொள்ள இயலும்.*

*9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, ஒகத்து மாதம் 26 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.*

*டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,*
*பதிவாளர் நாயகம்.*

*பதிவாளர் நாயகம் திணைக்களம்,*
*இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2024, யூன் 02.*

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| மன்னார் | முசலி | முள்ளிக்குளம் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் முசலி பிரிவின் விவாகப் (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மன்னார் |

*07-644*

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி (தமிழ்) – நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரர் 30 வயதுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வயதாகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் / தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப்

பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, ஓகத்து மாதம் 26 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2024, யூலை 08.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| நுவரெலியா | அம்பகமுவ | அம்பகமுவ கோறளைப் பிரிவின் பொகவந்தலாவ பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி மூலம்) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா |

07-645

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி (சிங்கள) – நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரர் 30 வயதுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வயதாகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் /தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, ஒகத்து மாதம் 26 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2024, யூலை 08.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| நுவரெலியா | நுவரெலியா | நுவரெலியா கந்தப்பளை பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா |

07-646

---

**இலங்கை இராணுவத்தின் நிரந்தர படையின் கெடேற் உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்களை கோருதல்**

1. இலங்கை இராணுவத்தின் நிரந்தர படைக்கு கெடேற் உத்தியோகத்தர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கை இராணுவ பயிற்சிக்கல்லூரியில் பயிற்சி அளிக்கப்படுவர்.

2. இலங்கையில் பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து வெளியேறும் கெடேற் உத்தியோகத்தர்களுக்கு பாதுகாப்புக் கற்கை டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும். அவர்கள் 2 ஆம் லெப்டினன்ட் ஆரம்ப பதவியில் அதிகார ஆணைக்கு நியமிக்கப்பட்டு தகைமைகளுக்கும் இலங்கை இராணுவத்தின் தேவைகளுக்கும் ஏற்ப இலங்கை இராணுவ நிரந்தரப்படையின் படைப்பிரிவு ஒன்றிற்கு சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

3. **அடிப்படை தகைமைகள் :**

அ. குடியுரிமை: இலங்கையரான ஆண் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
ஆ. சிவில்அந்தஸ்து: திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும்.
இ. வயது: 2024, ஒகத்து 30 ஆந் திகதிக்கு 18 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

ஈ. உயரம்: 5 அடி 6 அங்குலத்திற்கு (167.5 cm) குறையாது இருத்தல் வேண்டும்.

உ. நிறை: 52 கிலோவுக்கு (118 இறாத்தல்) குறையாது இருத்தல் வேண்டும்.

ஊ. மார்பு: 32 அங்குலத்திற்கு குறையாது இருத்தல் வேண்டும்.

எ. பார்வைக் கூர்மை: 6/6 (மூக்கு கண்ணாடி மற்றும் வில்லை பாவிக்காது) இருத்தல் வேண்டும்.

ஏ. உடல் பருமன் சுட்டி (B.M.I. Index) : 18.5 $Kg/m^2$-25$Kg/m^2$ இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

4. **கல்வித்தகைமைகள் :**

அ. க.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் மூன்று தடவைகளுக்கு மேற்படாதவாறு ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் (சாதாரண சித்தி) வேண்டும். சாதாரண பொதுப் பரீட்சையில் 30% புள்ளிகளை பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

ஆ. க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் எட்டு(08) பாடங்களில் (விஞ்ஞானபாடம் உட்பட) சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் மூன்றுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆங்கிலம், கணிதம், சிங்களம்/ தமிழ் ஆகிய பாடங்களுக்கு திறமைச் சித்திபெற்றிருத்தல் அல்லது ஆங்கில பாடத்திற்குசாதாரண சித்தி (S) மட்டும் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் ஆங்கில பாடத்திற்கு திறமை சித்தி (C) பெற்றிருத்தல் அல்லது ஆங்கில மொழி மூலம் NVQ – 4 ஆம் மட்டத்தில்பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றிடமிருந்து டிப்ளோமா/ பட்டம் பெற்றிருத்தல். (NVQ) சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்)

அல்லது

இ. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட க.பொ.த (சாதாரண தரம்) மற்றும் க.பொ.த (உயர்தரம்) பரீட்சைகளுக்குச் சமமான சர்வதேசப் பரீட்சை ஒன்றில் (Pearson Edexcel GCSE, GCE மற்றும் Cambridge அல்லது மற்றவை) அதற்குச் சமமான சித்தியை பெற்றிருத்தல் வேண்டும் (மேலே உள்ள கட்டாயப் பாடங்கள் உட்பட)

5. **வேறு தகைமைகள்:** தேசிய/சர்வதேச மட்டத்தில் விளையாட்டு, தலைமைத்துவம்,வேறு சாதனைகளை பெற்றிருத்தல் மற்றும் பிற மொழிகளை கையாளக்கூடியதிறமை (சிங்களம் மற்றும் ஆங்கிலம் தவிர) விசேட தகைமைகளாக கருதப்படும்.

6. **பொதுவானது :**

அ. பயிற்சிக் காலத்தில் கெடேற் உத்தியோகத்தர்களுக்குத் திருமணம் முடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

ஆ. விண்ணப்பதாரர்கள் சிறந்த உடல் ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்ட அனைத்து விண்ணப்பதாரர்களும் ஆட்சேர்ப்புக்கு முன், இலங்கை இராணுவத்தால் நடாத்தப்படும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுதல் வேண்டும் என்பதுடன், அதில் அவர்கள் தேர்ச்சி பெற வேண்டும்.

7. **சேவை நிபந்தனைகள் :**

அ. பயிற்சிக் காலத்தின் இறுதியிலிருந்து (அதிகார ஆணைக்கு நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து) 10 வருடங்கள் கட்டாயமாக இராணுவ சேவையில் ஈடுபடுதல் வேண்டும். அதற்காக, இலங்கை இராணுவத்துடன் பிணைமுறியொன்றிக்கும் ஒப்பந்தமொன்றிக்கும் வருதல் வேண்டும்.

ஆ. பயிற்சிக் காலத்தில் கெடேற் உத்தியோகத்தர் ஒருவரின் மாத சம்பளம் ரூ. 91,551.80 ஆகும். (அனைத்து கொடுப்பனவுகள் உட்பட). கெடேற் உத்தியோகத்தர் ஒருவராக சேவையாற்றும் காலப்பகுதியில் அவர்கள் எந்தவொரு சம்பள அதிகரிப்புக்கும் உரித்துடையவராக மாட்டார்.

இ. கெடேற் உத்தியோகத்தர்கள் இலங்கை இராணுவ பயிற்சிக் கல்லூரியில் 12 மாத பயிற்சியைப் பெறுதல் வேண்டும்.

ஈ. பயிற்சிக்காலப்பகுதியில் கெடேற் உத்தியோகத்தர்களின் அந்தஸ்து மற்றைய பதவிகளுக்கு சமமாக இருக்கும் என்பதுடன், அவர்கள் இராணுவச் சட்டத்திற்கும் சிவில் சட்டத்திற்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

உ. **பாடநெறியிலிருந்து விலகுதல்/நீக்குதல்.**

(1) பயிற்சிக் காலப்பகுதியில் கெடேற் உத்தியோகத்தர் ஒருவர் தனது சுய விருப்பில் தனது அபேட்சகத்துவத்தை முடிவுறுத்துவாராயின், கெடேற் உத்தியோகத்தர் சார்பில் இலங்கை குடியரசுக்கு அதுவரை ஏற்க நேரிட்ட எல்லாச் செலவுகளையும் அவருடைய பாதுகாவலர் அல்லது பிணையாளர்கள் இலங்கை குடியரசுக்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

(2) கெடேற் உத்தியோகத்தர் ஒருவர் பயிற்சிக் காலத்தில் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் துர்நடத்தை காரணமாக தனது மோசமான பாதுகாப்பு செயல் திறன், தனது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட காரணிகள் காரணமாக அதிகார ஆணை வழங்கப்படுவதற்கு தகுதியற்றவர் என உத்தியோகத்தர்களினால் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், உத்தியோகத்தர் சார்பில் இலங்கை குடியரசுக்கு ஏற்க நேரிட்ட எல்லாச் செலவுகளையும் அவருடைய பாதுகாவலர் அல்லது பிணையாளர்கள் இலங்கை குடியரசுக்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

(3) பாடநெறியிலிருந்து விலகிய, விலக்கப்பட்ட அல்லது மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் தகுதியற்றவர் என பயிற்சியிலிருந்து நீக்கப்பட்ட கெடேற் உத்தியோகத்தர் ஒருவருக்கு மீண்டும் இலங்கை இராணுவத்தின் கெடேற் உத்தியோகத்தர் ஒருவராக இணைந்து கொள்ள முடியாது.

8. **சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்**: இலங்கை இராணுவத்தின்நிரந்தர படையின் உத்தியோகத்தர்களாக இரண்டாம் நிலை லெப்டினன்ட் ஆரம்ப பதவியில் அதிகார ஆணைக்கு நியமிக்கப்படும் போது, அவர்கள் இலங்கை இராணுவத்தின் உத்தியோகத்தர்களுக்குரிய பின்வரும் சம்பள அளவுத் திட்டத்தில் வைக்கப்படுவார்கள்.

| தொடர் இல. | பதவி | அரச முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 3/2016 இன் படி | | |
|---|---|---|---|---|
| | | திரட்டிய சம்பளம் 2020 இருந்து | 2020.01.01 முதல் சம்பள ஏற்றம் | ஆகக்கூடிய திரட்டிய சம்பளம் |
| 1 | இரண்டாவது லெப்டினன் | ரூ. 41,905.00 | - | - |
| 2 | லெப்டினன் | ரூ. 47,615.00 | 30x1335 (வருடாந்த) | ரூ. 87,665.00 |
| 3 | கெப்டன் | ரூ. 55,625.00 | 24x1335 (வருடாந்த) | ரூ. 87,665.00 |
| 4 | மேஜர் | ரூ. 60,965.00 | 22x1335 (வருடாந்த) | ரூ. 90,335.00 |
| 5 | லெப்டினன் கர்னல் | ரூ. 62,595.00 | 22x1630 (வருடாந்த) | ரூ. 98,455.00 |
| 6 | கர்னல் | ரூ. 76,175.00 | 17x2170 (வருடாந்த) | ரூ. 113,065.00 |
| 7 | பிரிகேடியர் | ரூ. 80,515.00 | 15x2170 (வருடாந்த) | ரூ. 113,065.00 |
| 8 | மேஜர் ஜெனரல் | ரூ. 88,000.00 | 12x2700 (வருடாந்த) | ரூ. 140,400.00 |
| 9 | லெப்டினன் ஜெனரல் | ரூ. 93,400.00 | 10x2700 (வருடாந்த) | ரூ. 140,400.00 |
| 10 | ஜெனரல் | ரூ. 101,500.00 | 7x2700 (வருடாந்த) | ரூ. 140,400.00 |

9. **ஏனைய வசதிகள் :**

பின்வரும் மாதாந்த கொடுப்பனவுகள் செலுத்தப்படும் :

அ. தகைமை கொடுப்பனவுகள்
ஆ. இலவச உணவு அல்லது உணவுக் கொடுப்பனவுகள்
இ. உள்ளே தங்குவதற்கு கட்டளையிடப்பட்டிருக்கையில் அனுமதி குலைவுப்படி (Disturbance Allowance) (திருமணமான உத்தியோகத்தர்களுக்கு மட்டும்)
ஈ. சீருடை பேணல் கொடுப்பனவு

10. பின்வரும் வசதிகள் வழங்கப்படும் /கொடுப்பனவுகள் செலுத்தப்படும்

அ. உள்ளே தங்குவதற்கு கட்டளையிடப்பட்டிருக்கையில் இலவச தங்குமிட வசதி.
ஆ. வாடகை வீடுகளில் வசிக்கும்போது மட்டுப்படுத்தப்பட்ட வீட்டு வாடகை.
இ. இலவச சீருடை.
ஈ. திருமணமான உத்தியோகத்தர்களுக்கு பணியாள் படி (Batmen Allowance) அல்லது திருமணமாகாத உத்தியோகத்தர்களுக்கு பணியாள் சேவை (Batmen services).
உ. உள்ளே தங்குவதற்கு கட்டளையிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு வேலைத்தலத்திலிருந்து வீடு வரை பிரயாணம் செய்வதற்கு மாதத்திற்கு ஒரு தடவை புகையிரத ஆணைச்சீட்டொன்று.

*11.* **சம்பளம் மற்றும் அடுத்த கட்ட சேவை நிபந்தனைகள் தொடர்பில் பின்வரும் ஒழுங்குவிதிகள் உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும்.**

அ. இராணுவ சம்பளக் கோவை

ஆ. 1993 ஆம் ஆண்டு ஒகத்து 17 ஆம் திகதிய 780/7 ஆம்இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காலத்திற்குக் காலம் திருத்தப்படட 1992 ஆம் ஆண்டின் இராணுவ உத்தியோகத்தர் (நிரந்தர படையணி) ஒழுங்குவிதிகள்.

இ. 1989 ஆம் ஆண்டு யூன் 15 ஆம் திகதிய 562/11ஆம்இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் இராணுவ ஓய்வூதிய மற்றும் சம்பளப் பணிக்கொடை பிரமாணக் குறிப்பு.

*12.* இங்கு கீழே பந்தி 13 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரகடனப் பத்திரமொன்றில் பெற்றோர் அல்லது பாதுகாவலரால் கையொப்பமிடப்படல் வேண்டும் என்பதுடன், அதனை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். மேற்படி தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களை நியமிப்பதற்கு முன்னர் விண்ணப்பதாரர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் பிரகடனத்தில் உள்ளவாறு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுடன் பிணைமுறியொன்றில் கையொப்பமிடுதல் வேண்டும். விசேட சந்தர்ப்பங்களை தவிர தந்தை உயிருடன் இருக்கும் பயிலிளவல் உத்தியோகத்தர் ஒருவரின் பாதுகாவலராக தந்தை இருப்பார் என்பதுடன், அவர் உயிருடன் இல்லாதிருப்பின் மட்டும் தாய் அல்லது பாதுகாவலர் பாதுகாவலராக இருப்பார்.

*13.* **விண்ணப்பதாரரின் தாய், தந்தை அல்லது பாதுகாவலரால் கையொப்பமிடப்பட வேண்டிய பிரகடனம்**

அ. நான், இலங்கை இராணுவத்தின்கெடேற் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பதாரரான...................... என்பவரின் தந்தை/தாய்/பாதுகாவலர் ஆவேன்.

ஆ. மேலே குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரர் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ பயிற்சி நெறியைத் தொடர தெரிவு செய்யப்படின், இங்கு பின்வரும் விடயங்கள் தொடர்பான பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

(1) பயிற்சிக் காலத்தின் போது விண்ணப்பதாரருக்கு ஏற்க நேரிடும் அனைத்து தனிப்பட்ட செலவுகளையும் ஏற்றல்.

(2) மேற்கூறிய விண்ணப்பதாரர் பயிற்சிக் காலப்பகுதியில் சுய விருப்புடன் அதிகார ஆணையிலிருந்து வெளியேறினால், அவர் சார்பில் அரசாங்கத்திற்கு ஏற்க நேரிட்ட அனைத்து செலவுகளையும் இலங்கை குடியரசிற்கு திருப்பிச் செலுத்துதல்.

(3) மேற்குறிப்பிட்ட விண்ணப்பதாரர் பயிற்சிக் காலப்பகுதியில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் (துர்நடத்தை காரணமாக அல்லது தனது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட காரணி காரணாக) அதிகார ஆணை பெறுவதற்குத் தகுதியற்றவர் என அதிகாரிகளினால் அறிக்கை சமர்ப்பிக்கப்படுமாயின், அவர் சார்பில் அரசாங்கத்திற்கு ஏற்க நேரிட்ட அனைத்து செலவுகளையும் இலங்கை குடியரசிற்கு திருப்பிச் செலுத்தல்.

❖ பொருந்தாத சொற்களை வெட்டி விடுக.

..............................................
தாய்/தந்தை/பாதுகாவலரின் கையொப்பம்

பெயரும் முகவரியும் (தெளிவான எழுத்துக்களில்) :......................................
திகதி :................................................................
சாட்சி கையொப்பம் :......................................
பெயரும் முகவரியும் (தெளிவான எழுத்துக்களில்) :..........................................

*14.* **மொழித் தேவைகள்** : தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிகள் சட்டத்திற்கும் அச்சட்டத்திற்கான திருத்தங்களுக்கும் அமைவாகவும், இலங்கைக் குடியரசின் அரசகரும மொழிக் கொள்கையை அமுல் செய்வதற்கு காலத்துக்கு காலம் விதிக்கப்படுகின்ற சட்டத்திட்டங்களுக்கும் ஏற்ப செயற்படுதல் வேண்டும்.

*15.* **அடையாளத்தை உறுதிப்படுத்தல்** : விண்ணப்பதாரர்கள் தங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டும். இதற்காக ஆட்பதிவு திணைக்களம் அல்லது தபால் மா அதிபரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை மற்றும் மோட்டார் வாகன ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட சாரதி அனுமதி பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

*16.* பொதுச் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களை, அவர்கள் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் விடுவிக்க முடியும் என்ற திணைக்களத் தலைவரின் அத்தாட்சியுடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

*17.* **விண்ணப்பங்கள்**: விண்ணப்பப் படிவம் விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தில் கீழே காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்டு, 2024, ஒகத்து 05 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர்

கிடைக்கக் கூடியவாறு,'ஆளனி நிருவாகப் பணிப்பாளர் சபை, இலங்கை இராணுவத் தலைமையகம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு' என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'இலங்கை இராணுவ நிரந்தர படையில் குறுகியகால கெடேற் உத்தியோகத்தர் பாடநெறியின் கெடேற் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்' எனக் குறிப்பிடுதல் வேண்டும். பிந்திக்கிடைக்கும் விண்ணப்பங்களும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலும்,இராணுவத் தலைமையகத்தினால் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படவும் மாட்டாது. மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்வதற்கும் www.army.lk எனும் இணையத்தளத்தினுள் பிரவேசிக்கவும்.

18. **விண்ணப்பத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் நிழற் பிரதிகளை அனுப்புதல் வேண்டும்:**

அ. பிறப்புச் சான்றிதழ்.

ஆ. கல்வித் தகைமைகளை அத்தாட்சிப்படுத்தும் சான்றிதழ்கள்.

இ. பாடசாலை விடுகைச் சான்றிதழ்.

ஈ. கிராம உத்தியோகத்தர் சான்றிதழ்.

உ. பொலிஸ் தடையகற்றல் சான்றிதழ்

ஊ. விளையாட்டு மற்றும் இணைச் செயற்பாடுகளுக்கான சான்றிதழ்கள்

எ. விண்ணப்பதாரரை அறிமுகமான (நற்சாட்சிப் பத்திரமொன்றை வழங்கக்கூடிய ஒருவரிடமிருந்து) நபர்களிடமிருந்து அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களும் விண்ணப்பதாரர் இறுதியாக கல்வி கற்ற பாடசாலை அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சாட்சிப் பத்திரமொன்றும்.

ஏ. பொருத்தமான ஏனைய சான்றிதழ்கள்

ஐ. மேலும், கிராம உத்தியோகத்தரினால் அல்லது சட்டத்தரணி ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தேசிய ஆளடையாள அட்டையின் நிழற்படப் பிரதியொன்றையும், அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட 2" ‹2" ‹1/2 அளவிலான புகைப்படம் ஒன்றையும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

19. **நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல்** : மேற்கண்ட தேவைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் ஆரம்ப தெரிவுக்கு உட்படுத்தப்படுவார்கள். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் இராணுவத் தளபதியால் விதிக்கப்படுகின்றவாறு பரீட்சைகளுக்குத் தோற்றுதல் வேண்டும். பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்படுகின்ற தெரிவுக் குழுவின் முன்னால், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு இறுதியாக தெரிவு செய்யப்படுவார்கள்.

20. தேர்வுக் குழுவினால் நேர்முகப்பரீட்சைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும் இடம், நேரம் மற்றும் திகதி என்பன கடிதம் மூலம் அறியத்தரப்படும். நேர்முகப் பரீட்சை கொழும்பில் நடாத்தப்படும். இது சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் பயணச் செலவுகள் அல்லது பிற செலவுகள் எதுவும் இலங்கை குடியரசினால் செலுத்தப்படமாட்டாது.

21. விண்ணப்பதாரி ஒருவரைப் பரிந்துரைக்க முயற்சி செய்யும் எவரும் நட்சான்றிதழொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்யலாம். விண்ணப்பதாரியொருவரின் தேர்வை எந்த வகையிலும் தூண்டுவது அல்லது செல்வாக்குச் செலுத்த முயற்சிப்பது விண்ணப்பதாரியை தகுதி இழக்கச் செய்யும்.

22. ஆட்சேர்ப்புக்குத் தகைமை பெறாத விண்ணப்பதாரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது. அத்தகைய விண்ணப்பதாரர்களினால் முன்வைக்கப்படுகின்ற விசாரணைகள் ஏற்றுக்கொள்ளப்படவும் மாட்டாது.

**குறிப்பு** - இந்த வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப் பட்டுள்ளது. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வாசகங்களுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படின், சிங்கள மொழிமூல வாசகம் மேலோங்கி நிற்கும்.


எச்எல்வீஎம் லியனகே, ஆர்டப்ளியூபீ ஆர்எஸ்பீஎன்டியூ
லெப்டினனட் ஜெனரல்,
இராணுவத் தளபதி.

இலங்கை இராணுவத் தலைமையகம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர,
கொழும்பு.
2024, யூன் 08.

a

| FOR OFFICIAL USE |
|---|
| |
| |

## APPLICATION FOR OFFICER CADET VACANCIES (SHORT COURSE) OF SRI LANKA ARMY REGULAR FORCE




### PERSONAL DETAILS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| b. | Name with Initials | | | | |
| c. | Name you prefer to be called | | | | |
| d. | Full Name | | | | |
| e. | Contact Nos | Mobile | | Email Address | |
| | | Home | | | |
| f. | Date of Birth | / / | Age as at 30 August 2024 | Y M D | |
| g. | Height ... cm | Chest ... inch | Weight ... Kg | Sex | |
| h. | N.I.C./ Driving Licence/ Passport No | | | | |
| i. | Postal Address | | | | |
| j. | Marital Status | | Province | | District |
| k. | ED & Letter | | GN Division & No | | |

### BASIC EDUCATIONAL QUALIFICATIONS

| | | |
|---|---|---|
| l. | **GCE (O/L) or Equivalent Exam** | |
| | Name of the School (s) | |

| Ser | Subjects | **Attempt** | First | Second | Third |
|---|---|---|---|---|---|
| | | **Year** | 20 ........... | 20 ............ | 20 ............. |
| | | **Index No** | | | |
| 1 | English | | | | |
| 2 | Mathematics | | | | |
| 3 | Sinhala/ Tamil | | | | |
| 4 | | | | | |
| 5 | | | | | |
| 6 | | | | | |
| 7 | | | | | |
| 8 | | | | | |
| 9 | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | | | | | |
| 11 | | | | | |

m. **GCE (A/L) or Equivalent Exam**

| Name of the School (s) | |
|---|---|
| | |

| Ser | Subjects | Attempt | First | Second | Third |
|---|---|---|---|---|---|
| | | year | 20 ........... | 20 ............ | 20 ............. |
| | | Index No | | | |
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |
| 5 | General English | | | | |
| 6 | Common General Test | | | | |
| 7 | Z- score | | | | |
| 8 | University Entrance (**Yes**/**No**) | | | | |

n. **Other Academic Qualifications**

| Ser | Description | Institute | Duration | | Grading |
|---|---|---|---|---|---|
| | | | From | To | |
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |
| 5 | | | | | |

**OTHER QUALIFICATIONS**

o. **Sports Activities**

| Ser | Description | Acheivement | | | |
|---|---|---|---|---|---|
| | | School | Regional | National | International |
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |

p. **Leadership Activities**

| Ser | Description | Acheivement | | | |
|---|---|---|---|---|---|
| | | School | Regional | National | International |
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |

q. **Extracurricular Activities**

| Ser | Description | Acheivement | | | |
|---|---|---|---|---|---|
| | | School | Regional | National | International |
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |

**OTHER IMPORTANT DETAILS**

r. **Records of Previous service in Armed Services (if any)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **Records of Previous service in Armed Services (if any)** | | | | Armed Service | | | |
| Svs No | | Rank | | Duration | | to | |
| Reason for Discharge/ Resign | | | | | | | |
| | | | | | | | |

s. **Details of Occupation (If any)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Details of Occupation (If any)** | | Svc No. | | Position | |
| Employer | | | | | |
| Contact Person & Number | | | | | |

I declare that if the applicant named above is selected, he can be released from the current employment.

| | | |
|---|---|---|
| Name of Authorised Person | | |
| | | Signature & Stamp |

t. 

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Dual Citizenship (If any) | Country | | From | | To | |

u. **Have you ever applied for any position in the Tri-Services/ Police or any other Armed Service? (if any)**

| Ser | Armed Service | Date | Position | Present Status | Reason for Disqualification |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

v. **Family Details :**

| Ser | Relationship | Name with Initials | Occupation | Employer |
|---|---|---|---|---|
| 1 | Father | | | |
| 2 | Mother | | | |
| 3 | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | | | | |
| 5 | | | | |

w. | **Name and Contact Number of NOK** | | |
|---|---|---|

x. **Details of Blood relatives who serve (d) the Sri Lanka Army**

| Ser | Svs No | Rank | Name | Relationship | Regiment | Present Status |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |

y. Have you or any of your close relatives ever been convicted or found guilty or have any pending court cases against at any Court of Law? (If any, provide full particulars of each case)

z. Details of two non-relatives who know your character and qualifications very well

| | | | |
|---|---|---|---|
| Name (1) | | | |
| Postal Address | | | |
| | | Contact No. | |
| N.I.C/ Driving License No. | | Occupation | |
| Place of Work | | | |
| Name (2) | | | |
| Postal Address | | | |
| | | Contact No. | |
| N.I.C/ Driving License No. | | Occupation | |
| Place of Work | | | |

I declare on my honour that the answers I have provided to the questions are correct to the best of my knowledge and belief.

aa. | Date | | | / | | | 2 | 0 | 2 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|

.....................................................
Signature

ab. **Document Attached**

| **Ser.** | **Type of Document** | **Attached** | **Not Attached** |
|---|---|---|---|
| 1 | N.I.C/ Driving Lincese/ Passport (Copy) | | |
| 2 | Birth Certificate (Copy) | | |
| 3 | GCE (O/L) Certificate (Copy) | | |
| 4 | GCE (A/L) Certificate (Copy) | | |
| 5 | Other Educational Qualification Certificates (Copy) | | |

ac. In case of insufficient space, use this space or separate sheet and provide additional details.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் புகையிரத சேவை

## இரத்மலானை இலங்கை ஜேர்மன் புகையிரத தொழில்நுட்பப் பயிற்சி நிலையம் பயிலுநர்களை இணைத்துக்கொள்ளல் - 2024

இரத்மலானை இலங்கை ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்கு 2024 ஆம் ஆண்டில் பயிலுநர்களை இணைத்துக்கொள்வதற்காக இங்கு இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்குறைந்த தகைமைகளை உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. **ஆகக் குறைந்த தகைமைகள் :**

(அ) வயது : 2024.08.26 ஆந் திகதிக்கு 16 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வி சார் தகைமைகள் : சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் உள்ளடங்கலாக 06 பாடங்கள், எந்தவொரு நான்கு பாடங்களுக்கு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஒரே அமர்வில் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

03. பயிலுநர் பயிற்சிக்கான தெரிவு செய்யப்பட்ட கீழ்வரும் தொழில் மற்றும் அத் தொழிலுக்குரிய காலவரையறைகளுக்கு அமைய பாடநெறிகளை பயில்வதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும். பாடநெறிகள் சிங்கள மொழி மூலம் மாத்திரமே நடாத்தப்படும். கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறி தொடர்பில் பயிலுநர்களை தெரிவு செய்யப்படுவதுடன் அவ்வாறு தெரிவு செய்யப்படும் பயிலுநர்களின் எண்ணிக்கை முன்னால் காட்டப்பட்டுள்ளது :

| | |
|---|---|
| 1. டீசல் என்ஜின் இயந்திரவியலாளர்கள் | - 03 வருடங்கள் (NVQ Level 04) - 30 |
| 2. பொருத்துநர்கள் | - 03 வருடங்கள் (NVQ Level 04) - 25 |
| 3. மின்னியல் தொழில்நுட்பவியலாளர்கள் | - 03 வருடங்கள் (NVQ Level 04) - 30 |
| 4. இயந்திரவியலாளர்கள் | - 03 வருடங்கள் (NVQ Level 04) - 25 |

04. **விண்ணப்பங்கள்**: விண்ணப்பதாரிகளால் இதனுடன் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைய மி. மீ. 297 × 210 (A-4) அளவுடைய வெள்ளை கடதாசியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களில், முழுமையான தகவல்கள் சரியாக குறிப்பிடப்பட வேண்டும். தேவையான முழுமையான தகவல்களை கொண்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

05. **பாடநெறி தொடர்பில் தெரிவு செய்தல் :**

(1) எழுத்து மற்றும் செயன்முறை பரீட்சை மூலம் பாடநெறி தொடர்பில் தெரிவு செய்யப்படுவதுடன், தேவையான ஆகக்குறைந்த தகைமையை கொண்ட மற்றும் 07 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(2) எழுத்துப் பரீட்சையானது கணிதம், அடிப்படை தொழில்நுட்ப அறிவு, பொது அறிவு மற்றும் நுண்ணறிவுப் பரீட்சை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நடைபெறும். எழுத்து மூலப் பரீட்சையில் அதி உயர் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் செயன்முறை/நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(3) எழுத்து மற்றும் செயல்முறை பரீட்சையில் அதி உயர் மொத்த புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் பயிற்சிக்காக தெரிவு செய்யப்படுவதுடன், அடிப்படைத் தொழிற்சாலை பயிற்சியின் பின் நடைபெறும் பரீட்சையில் பெறுகின்ற புள்ளிகள் மற்றும் அக்கால வரையறைக்குள் வரவு, காட்டப்படும் திறமைகள் மற்றும் பொதுப் பரீட்சையில் பெறுபேறுகள் மற்றும் மாணவர்களின் விருப்பு போன்ற அனைத்தையும் கருத்திற் கொண்டு ஒவ்வொரு பாடநெறிகளுக்காக தெரிவு செய்யப்படுவார்கள்.

06. **பரீட்சை மொழி மூலம்** : கோரப்படுவதன் அடிப்படையில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடைபெறும்.

07. **பரீட்சைக் கட்டணம்**: இப்பரீட்சை தொடர்பில் மீண்டும் செலுத்தப்படாத ரூபா 1,000.00 பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். புகையிரத பொது முகாமையாளரின், மக்கள் வங்கி, நகர மத்திய கிளையின் கணக்கு இலக்கம் : 176-1001-2-9027313 இற்கு வரவு வைக்கும் முகமாக எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் செலுத்திய பற்றுச்சீட்டினை, விண்ணப்பத்துடன்

இணைத்து அனுப்ப வேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை எதிர்கால நன்மை கருதி தம்மிடம் வைத்துக்கொள்ள வேண்டும்) பற்றுச்சீட்டுக்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். உள்வாங்கல் பரீட்சைக்கு சமூகமளிக்காமையினால் அல்லது வேறு எந்தவொரு காரணத்தினாலும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதை கருத்திற் கொள்க.

08. **பரீட்சை நிலையம்**: அனைத்து தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்திருக்கும் விண்ணப்பதாரிகளுக்காக எழுத்து மூல பரீட்சையொன்று இரத்மலானை நிலையமொன்றில் மாத்திரம் நடைபெறும்.

09. **உடன்படிக்கையை கைச்சாத்திடல்**: நிறுவனத்தின் பயிற்சி தொடர்பில் தெரிவு செய்யப்பட்ட அனைத்து விண்ணப்பதாரிகளும் தொழிலுக்குரிய கால வரையறைக்குள் பயிற்சியை வெற்றிகரமாக மேற்கொள்வதாக இலங்கைப் புகையிரத திணைக்களத்துடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டும்.

10. பயிற்சியின் பின் பயிலுநர்களுக்குத் தொழில் வாய்ப்பினை வழங்குவதற்கு திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

11. கீழ்வரும் மாதிரி விண்ணப்பப்படிவத்தை தயாரித்து "பிரதி பொது முகாமையாளர் (பயிற்சி மற்றும் மனித வள அபிவிருத்தி), இலங்கை ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையம், கல்தேமுல்ல வீதி, இரத்மலானை" இற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பத்தினை இடும் உறையின் வலது பக்க மேல் மூலையில் "இலங்கை பு. தொ. ப. ந./2023" எனக் குறிப்பிட வேண்டும். அனைத்து அறிவுறுத்தல்களும் வட்ஸ்அப், மின்னஞ்சல் மூலம் மாத்திரம் நடைபெறுவதால் அத் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரியை தெளிவாக மற்றும் சரியாக குறிப்பிட்டு அனுப்பவும்.

12. விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி : விண்ணப்பங்கள் 2024.08.26 ஆந் திகதி வரை ஏற்கப்படுவதோடு, தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

எஸ். எஸ். முதலிகே,
புகையிரதப் பொது முகாமையாளர் (பதில்).

புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம்,
இலங்கை புகையிரத சேவை,
கொழும்பு - 10,
2024, யூலை 08.

**இரத்மலானை இலங்கை ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்கு பயிலுநர்களை இணைத்துக்கொள்ளல் - 2024**

அலுவலக பாவனைக்கு மாத்திரம்

| |
|---|
| |

01. முழுப்பெயர் (குடும்பப் பெயருடன்) தமிழில் மற்றும் ஆங்கிலத்தில் :

தமிழில் : ..............................................................................................................................................

ஆங்கிலத்தில் : ..............................................................................................................................................

02. முகவரி :

தமிழில் : ..............................................................................................................................................

ஆங்கிலத்தில் : ..............................................................................................................................................

03. மாவட்டம் : ..............................................................................................................................................

04. பிறந்த திகதி : | | | | | | | | | |

தேசிய ஆளடையாள அட்டை இல. : | | | | | | | | | | | | |

05. பால் : (ஆண்/பெண்) : ..............................................................................................................................................

06. தொலைபேசி இல. : ................................................ வாட்ஸ்அப் இல. (WhatsApp) : ...........................................................

மின்னஞ்சல் முகவரி (E-Mail address) : .......................................................................

07. கல்விசார் தகைமைகள் : க. பொ. த. (சா.த) :

ஆண்டு : ............................. சுட்டெண் : .....................................

| தொடர் இலக்கம் | விடயம் | தரம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

08. விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : ...................................................................

09. பரீட்சைக்கட்டணப் பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும்.

10. இவ் விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு உறுதிப்படுத்தப்பட்ட ஏதேனுமொரு விடயம் பொய்யானவை என என்னை தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து நான் பொருத்தமற்றவராக ஆவதையும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து பயிற்சியிலிருந்து விலக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.....................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :.......................

07-630

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## கத்தோலிக்க மறை ஆசிரியர் சான்றிதழ்ப் பரீட்சை - 2024

**ஒழுங்குகளும் பாடத்திட்டமும்**

01. 2020, 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான கத்தோலிக்க மறை ஆசிரியர் சான்றிதழ்ப் பரீட்சைக்காக விண்ணப்பம் கோரப்படுகிறது.

02. **பரீட்சை நிலையம்** :

அட்டவணை 01 இல் காட்டப்பட்டுள்ள எல்லா மாவட்டங்களிலும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கைக்கேற்ப பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும். எனினும் ஒரு நகரத்தில் போதியளவு விண்ணப்பதாரிகள் எண்ணிக்கை காணப்படாத சந்தர்ப்பத்தில் அந்த நகரத்தின் பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு குறித்த விண்ணப்பதாரிகள் அந்நகரத்துக்கு அருகாமையிலுள்ள வேறு பரீட்சை நிலையத்துக்கு அனுப்பப்படுவர்.

03. **மொழி மூலம்** :
இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறுவதோடு ஒரு விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற தான் விரும்பிய ஒரு மொழியில் மாத்திரமே அனுமதிக்கப்படுவர்.

04. **தகுதிகள்** :

இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் எல்லா விண்ணப்பதாரிகளும் பின்வரும் தகுதிகளில் ஏதாவது ஒரு தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

4.1 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் கத்தோலிக்க மறை ஆசிரியர் இறுதி சான்றிதழ்ப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.2 தேசிய மறைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் மறை ஆசிரியர் பரீட்சை அல்லது மறை ஆசிரியர் சிறப்புப் பரீட்சை அல்லது மறை ஆசிரியர் கௌரவ பட்டப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

4.3 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் க.பொ.த. (உ. தரப்) பரீட்சையில் கிறிஸ்தவ திருமறை அல்லது கிறிஸ்தவ நாகரீகம் என்னும் பாடங்கள் இரண்டில் ஒன்று உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

4.4 கத்தோலிக்க திருமறைப் பாடத்தில் திறமைச் சித்தியும் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் க.பொ.த. (ச. தரப்) பரீட்சையில் 06பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அல்லது கத்தோலிக்க திருமறைப் பாடத்தில் திறமைச் சித்தியும் இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் சிரேஷ்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சை அல்லது தேசிய பொதுக் கல்வி சான்றிதழ் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் அல்லது கிறிஸ்தவ சமய விவகார திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு கத்தோலிக்க மறைப்பாடசாலையில் ஒரு வருடத்துக்குக் குறையாத கற்பித்தல் அனுபவம் பெற்ற மறையாசிரியராக இருத்தல்.

**குறிப்பு** :

இப்பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரிகளும் மேற்கூறிய 4 ஆவது பந்தியில் குறிப்பிடப்படும் தகுதிகளில் ஒன்றையேனும் பெற்றிருப்பதாக கிறிஸ்தவ சமய விவகார திணைக்களத்தில் அனுமதி பெற்ற கத்தோலிக்க மறைப்பாடசாலை அதிபர் அல்லது பங்குக் குருவானவர் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

05. **விண்ணப்பித்தல்** :

5.1 பதிவுசெய்யப்பட்ட மறைப் பாடசாலை அதிபர்கள் ஊடாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய இவ் விண்ணப்பப்படிவங்கள் தபால் மூலமாக தற்போது மறைப் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அதேவேளை www.doenets.lk என்ற இணையத்திளத்தினூடாகவும் தரவிறக்கம் செய்துகொள்ளக்கூடிய வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

5.2 யாரேனும் விண்ணப்பதாரி ஒருவருக்கு தனிப்பட்ட விண்ணப்பதாரியாகப் பரீட்சைக்கு தோற்ற இடமளிக்கப்படமாட்டாது. ஆயினும் பந்தி 4 இல் காணப்படும் தகுதிகள் பெற்றுள்ள யாரேனும் பரீட்சைக்குத் தோற்ற விரும்புவாராயின் தமது வதிவிடத்துக்கு அருகாமையில் உள்ள மறைப்பாடசாலை மூலம் ரூபா 200.00 பரீட்சைக் கட்டணம் செலுத்தி பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்க முடியும். அதற்கான அறிவுறுத்தல் அனைத்தும் மறைப்பாடசாலை அதிபருக்கும் பெற்றுக் கொடுக்கப்படும்.

5.3 விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பதாரியின் பெயர்களை எழுதும்போது பிறப்புச் சான்றிதழில் உள்ளவாறே எழுதப்படுவதோடு, பரீட்சைப் பெறுபேறு பெற்றுக்கொண்ட பின்னர் பெயர் திருத்தத்துக்காக கோரப்படும்போது அச்சுப்பிழை தவிர்ந்த வேறு எவ்வித கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவம் தெளிவாகவும் பிழையின்றியும் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

5.4 மறைப் பாடசாலை கணினி இலக்கம், முகவரி என்பன பிழையின்றிக் குறிப்பிடப்படவேண்டியதோடு மறைப் பாடசாலை முகவரி மாற்றம் அடைந்திருப்பின் அதனை அறியத்தருவதோடு மறைப்பாடசாலை அதிபருடன் தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்தையும் தருக.

5.5 விண்ணப்பதாரிகள் உரிய தகுதிகளைப் பெற்றிருப்பது தொடர்பில் விண்ணப்பப்படிவங்களை சான்றுப்படுத்தும் மறைப்பாடசாலை அதிபர் அல்லது குருவானவர் பொறுப்பேற்க வேண்டும்.

5.6 2024, ஓகத்து மாதம் 26 ஆந் திகதி விண்ணப்பப்படிவங்களை ஏற்கும் இறுதித் திகதியாகவுள்ள அதேவேளை அன்றைய தினம் அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை பதிவுத் தபாலில் "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனம்சார் பரீட்சை ஒழுங்கமைப்புக்கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

06. **பரீட்சைக் கட்டணம்** :

இப்பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 200.00 ஆகும். ஆயினும் முதல் முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் இப்பரீட்சைக்கு கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. குறைவான பெறுபேற்றை பூரணப்படுத்து வதற்காக விண்ணப்பிக்கும் ஒரு பாடத்துக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 50.00 ஆகும்.

6.1 **பரீட்சைக் கட்டணம் செலுத்துதல்:**
குறிப்பிட்ட மறைப் பாடசாலை அதிபர் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய அனைத்து விண்ணப்பதாரிகளிடமும் பரீட்சைக் கட்டணம் சேகரிக்கப்பட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வருமானத் தலைப்பு இலக்கம் 20-03-02-13 இற்கு வரவிலிடுமாறு இலங்கையின் எந்த ஒரு தபால் நிலையத்திலும் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பவும். (பற்றுச்சீட்டின் போட்டோப்பிரதி ஒன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளது.)

6.2 எக்காரணத்தை முன்னிட்டும் இப்பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணம் வேறு பரீட்சைக்காக மாற்றுவதோ அல்லது மீண்டும் திரும்பக் கொடுப்பதோ இடம்பெறாது.

07. **அனுமதிப்பத்திரம்:**

பரீட்சைக்கு ஏற்றுக்கொள்ளப்படும் எல்லா விண்ணப்பதாரிகளுக்குமான அனுமதிப்பத்திரம் பரீட்சை ஆணையாளர் நாயகம் மூலம் மறைப்பாடசாலை அதிபருக்கு அனுப்பி வைக்கப்படும்.

7.1 பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் அனைத்து விண்ணப்பதாரிகளும் தமது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பமிட்டு அதனை உறுதிப்படுத்த வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளிலேயே பரீட்சை மேற்பார்வையாளரிடம் அனுமதிப்பத்திரத்தை ஒப்படைத்தல் வேண்டும். யாரேனும் விண்ணப்பதாரி ஒருவர் தனது அனுமதிப்பத்திரத்தை ஒப்படைக்காமல் இருந்தாலோ அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தமக்கு வழங்கப்பட்ட பரீட்சை நிலையம் தவிர்ந்த வேறு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றியிருந்தாலோ அவருடைய பரீட்சை விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

7.2 அனுமதிப்பத்திரத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பமானது மறைப்பாடசாலை அதிபரால் அல்லது மிஷனுக்குப் பொறுப்பான குருவால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

7.3 பரீட்சை நடாத்த 07 நாட்களுக்கு முன் அனுமதிப்பத்திரம் கிடைக்காவிட்டால் மறைப்பாடசாலை அதிபர் மூலம் அது பற்றி தாமதமின்றி பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு அறியத்தரவும். அத்தகைய சந்தர்ப்பத்தில் விண்ணபப்படிவங்களை பதிவுத் தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டின் போட்டோப்பிரதியுடன் கீழ் காணும் விபரத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

1. பரீட்சையின் பெயர்:
2. மறைப்பாடசாலையின் பெயர்:
3. மறைப்பாடசாலையின் முகவரி:
4. மறைப்பாடசாலையின் கணினி இலக்கம்:
5. விண்ணப்பதாரியின் முழுப்பெயர்:
6. விண்ணப்பித்த பரீட்சை நிலையம் /நகரம்:

08. **ஆள் அடையாளம்** :

பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்துக்குள் தான் தோற்றும் அனைத்து பாடங்களுக்கும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தி அடையும் வகையில் தனது ஆள் அடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஏதேனும் ஆவணங்களை சமர்ப்பிக்கலாம்.

- தேசிய அடையாள அட்டை;
- செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
- செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறு பரீட்சை விண்ணப்பதாரி ஆள் அடையளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் முகத்தையும் இரு காதுகளையும் மூடாதவாறு பரீட்சை நிலையத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறும் விண்ணப்பதாரி பரீட்சை நிலையத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார். மேலும் பரீட்சை நிலையத்தினுள் அனுமதிக்கப்பட்ட நேரம் முதல் பரீட்சை முடிவடைந்து அவ்விடத்தில் இருந்து வெளியேறும் வரை பரீட்சகர்களுக்கு பரீட்சார்த்தியை இனங்காணக்கூடிய வகையில் விண்ணப்பதாரி முகத்தையோ இரு காதுகளையோ மறைக்கும்படி எதுவும் அணியக்கூடாது.

09. **சித்தியடைந்தமையைத் தீர்மானித்தலும் பரீட்சைப் பெறுபேறு வெளியிடுதலும்** :

9.1 இப்பரீட்சைக்கான பாடங்களின் எண்ணிக்கை ஐந்து ஆவதோடு, பரீட்சையில் முழு சித்தியடைவதற்கு பரீட்சார்த்தி ஒருவர் அப்பாடங்கள் ஐந்திலும் சித்தியடைய வேண்டும். எவ்வாறாயினும் ஒரே தடவையில் உரிய பாடங்கள் ஐந்தில் ஒன்று மாத்திரம் சித்தியடையவில்லை எனின், அது குறை சித்தியாகக் கொள்ளப்படும். பரீட்சைக்குத் தோற்றிய வருடத்திலிருந்து அடுத்த மூன்று பரீட்சை வருடங்களுக்குள் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடையாத பாடத்துக்கான பெறுபேற்றை சீர்செய்துகொள்ள வேண்டும். அவ்வாறு குறை சித்தி பெற்ற மாணவர்கள் மீண்டும் பரீட்சை எழுதும்போது சித்தியடையாத பாடத்திற்கு மாத்திரமே பரீட்சை எழுத அனுமதி வழங்கப்படும்.

9.2 எல்லா பாடத்திலும் ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 100 புள்ளிகள் உரித்தாவதோடு சித்தியடையும் தரங்களுக்கு புள்ளிகளின் வீச்சும் குறியீடும் பின்வருமாறு,

| புள்ளிகள் வீச்சு | தரம் | குறியீடு |
|---|---|---|
| 0 - 34 | சித்தியில்லை | F |
| 35 - 54 | சித்தி | S |
| 55 - 69 | திறமை சித்தி | C |
| 70 - 100 | உயர் திறமை சித்தி | D |

9.3 விண்ணப்பதாரியின் பெறுபேற்றுப் பட்டியல் உரிய மறைப்பாடசாலை அதிபருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

10. **சான்றிதழ்** :

இப்பரீட்சையில் சித்திபெறும் அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் சான்றிதழ் வெளியிட ஒழுங்கு செய்யப்படும். உரிய சான்றிதழ் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் மறைப்பாடசாலை அதிபருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இப்பரீட்சையில் சித்தியெய்தி,சான்றிதழ் கிடைக்காத எவரேனும் இருப்பின் அது தொடர்பாக மறைப்பாடசாலை அதிபர் ஊடாக “பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனம்சார்பரீட்சைகள் பெறுபேற்றுக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ. 1503, கொழும்பு” என்னும் முகவரிக்கு கடிதம் மூலம் கேட்டறிய முடியும்.

11. **விடைத்தாள் மீள்பரிசீலனை செய்தல்**:

மறைப்பாடசாலை அதிபரின் வேண்டுகோளின்படி மாத்திரம் விடைத்தாள்கள் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படும். பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் மாதிரிப் படிவத்தின் மூலம் பரீட்சைப் பெறுபேறு வெளியிடப்பட்டு 14 நாட்களுக்குள் மீள்பரிசீலனைக்காக விண்ணப்பிக்க முடியும். இதற்கான கட்டணம் காலத்திற்குக் காலம் மாறுபடுவதனால், அதுபற்றி உரிய விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும்.எக்காரணம் கொண்டும் விண்ணப்பதாரிக்கோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவருக்கோ விடைத்தாளை பரீட்சிக்க இடமளிக்கப்படமாட்டாது.

12. **பரீட்சை பற்றிய விபரம்** :

இப்பரீட்சை ஐந்து(05) வினாப்பத்திரங்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமுரிய காலம் மூன்று (3) மணித்தியாலங்கள் ஆகும். அவ்வினாப்பத்திரங்கள் பின்வருமாறு அமையும்.

1. திருவிவிலியம்
2. திருவழிபாடும் அருளடையாளங்களும்
3. திருச்சபை வரலாறு (உலக, இலங்கை திருச்சபை வரலாறு)
4. மறைக்கல்வி
5. திருச்சபையின் சமூக கொள்கைதிரட்டு (திருச்சபையின் படிப்பினைகள்)

13. **வினாத்தாள் கட்டமைப்பு** :

- ஒவ்வொரு வினாப்பத்திரமும் பகுதி I, பகுதி II, பகுதி III என மூன்று பகுதிகளைக் கொண்டது.
- பகுதி I சுருக்கமான விடையளிக்கும் 10 வினாக்களைக் கொண்டதோடு எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். ஒரு வினாவுக்குரிய புள்ளிகள் 04 ஆகும். ($04 \times 10 = 40$ புள்ளிகள்)
- பகுதி II ஐந்து கட்டமைப்பு வினாக்களைக் கொண்டது. அவற்றுள் விரும்பிய நான்கு (04) வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒரு வினாவுக்கான புள்ளிகள் 12 ஆகும்.
($12 \times 4 = 48$ புள்ளிகள்)
- பகுதி III இரண்டு (02) கட்டுரை வினாக்களைக் கொண்டது. அவற்றுள் விரும்பிய ஒரு வினாவிற்கு விடையளித்தல் வேண்டும். இப்பகுதிக்கான புள்ளிகள் 12 ஆகும். ($12 \times 1 = 12$ புள்ளிகள்)

14. **பாடத்திட்டமும் மாதிரி வினாத்தாளும்**:

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் ஒழுங்குசெய்யப்பட்டு நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள கத்தோலிக்க மறை ஆசிரியர் சான்றிதழ் பரீட்சைக்குரிய பாடத்திட்டமும் மாதிரி வினாத்தாளும் “பணிப்பாளர், தேசிய மறைக்கல்வி நிலையம், பல்கம் பிளேஸ், கொட்டா வீதி, கொழும்பு 08” என்னும் முகவரியின் கீழ்ப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது 011 2685459 எனும் தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பு கொள்ளலாம்.

15. இந்த ஒழுங்குகள், பாடத்திட்ட பத்திரம் ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ள விதிகளின்படி செயற்பட எல்லா பரீட்சை விண்ணப்பதாரிகளும் கடமைப்பட்டுள்ளவராவதோடு இந்த ஒழுங்குத் திட்டங்களில் தரப்படாத ஏதேனும் விடயம் தேவைக்கேற்ப பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விருப்பத்தின்படி தீர்மானிக்கப்படும்.

16. சிங்களம் - தமிழ் - ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளிவரும் இந்த அறிவுறுத்தல்களில் மொழி மூலங்களில் ஏதேனும் பொருத்தமின்மை காணப்படின் சிங்கள மொழிமூலமான அறிவுறுத்தலின் படி செயற்படவும்.

எச். ஜே. எம். சீ. அமித் ஜயசுந்தர
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பத்தரமுல்ல, பெலவத்த,
2024, யூலை 26.

**அட்டவணை 01**

| மாவட்ட / நகர இலக்கம் | மாவட்டம் / நகரம் |
|---|---|
| 01 | கொழும்பு |
| 02 | கம்பஹா |
| 03 | களுத்துறை |
| 04 | கண்டி |
| 05 | மாத்தளை |
| 06 | நுவரேலியா |
| 07 | காலி |
| 08 | மாத்தறை |
| 09 | ஹம்பாந்தோட்டை |
| 10 | யாழ்ப்பாணம் |
| 11 | மன்னார் |
| 12 | வவுனியா |
| 13 | முல்லைத்தீவு |
| 14 | கிளிநொச்சி |
| 15 | மட்டக்களப்பு |
| 16 | அம்பாறை |
| 17 | திருகோணமலை |
| 18 | குருநாகல் |
| 19 | புத்தளம் |
| 20 | அநுராதபுரம் |
| 21 | பொலன்னறுவை |
| 22 | பதுளை |
| 23 | மொணராகலை |
| 24 | இரத்தினபுரி |
| 25 | கேகாலை |

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## இந்து தர்மாசிரியர் பரீட்சை - 2024

01. 2019, 2020, 2021, 2022, 2023, 2024 ஆகிய வருடங்களுக்கான இந்து தர்மாசிரியர் பரீட்சைக்கென பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. **பரீட்சை நிலையங்கள்** :

இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து மாவட்டங்களிலும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கைக்கேற்ப பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும். எனினும், குறித்த மாவட்டத்தில் போதியளவு விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பங்களில், அம்மாவட்டத்தின் பரீட்சை நிலையம் இரத்துச்செய்யப்பட்டு குறித்த விண்ணப்பதாரிகள், அதற்கு அருகில் அமைக்கப்படும் வேறொரு பரீட்சை நிலையத்திற் தோற்றுமாறு கோரப்படுவார்.

03. **மொழிமூலம்** :

இப்பரீட்சை தமிழ்மொழியில் மாத்திரம் நடாத்தப்படும்.

04. **தகைமை** :

இப்பரீட்சைக்கென விண்ணப்பிக்கும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுள் ஏதேனும் ஒரு தகைமையேனும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

4.1 அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.
4.2 பண்டிதர் பட்டம் பெற்றிருத்தல்
4.3 சைவப்புலவர் பட்டம் பெற்றிருத்தல்
4.4 கல்விப் பொதுத்தராதர (உயர்தரப் பத்திர) பரீட்சையில் இந்துசமயம், இந்துநாகரீகம் என்பவற்றுள் ஏதேனும் ஒன்றை ஒரு பாடமாகக் கொண்டு சித்திபெற்றிருத்தல்.
4.5 சைவநெறிப் பாடத்தில் திறமைச் சித்தியும் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு** : இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மேற்குறித்த 4 ஆம் பிரிவிற் குறிப்பிட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளார் என அறநெறிப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

05. **விண்ணப்பித்தல்** :

5.1 விண்ணப்பதாரி ஒருவருக்கு, வெளிவாரி விண்ணப்பதாரியாகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்பட மாட்டாது. எனினும், 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுள் ஏதேனும் ஒன்றைக்கொண்டுள்ள விண்ணப்பதாரி ஆயின், தாம் வசிக்கும் இடத்திற்கு அருகிலுள்ள அறநெறிப் பாடசாலை ஒன்றினூடாக பரீட்சைக் கட்டணமாக ரூபா 200.00 ஐச் செலுத்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்க முடியும். இது தொடர்பான அனைத்து அறிவுறுத்தல்களும் அறநெறிப் பாடசாலைத் தலைமை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

5.2 குறித்த அறநெறிப் பாடசாலைத் தலைமை ஆசிரியர்கள் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இவ் விண்ணப்பப்படிவங்கள் தபால் மூலம் அறநெறிப் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

5.3 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 20.08.2024 ஆகும்.

5.4 விண்ணப்பப் படிவங்களில், விண்ணப்பதாரிகளின் பெயர்களை உள்ளடக்கும்போது, பிறப்புச் சான்றிதழிற் பதிவிடப்பட்டுள்ளவாறே பெயர்கள் அமைய வேண்டும் என்பதோடு, பெறுபேறுகள் வழங்கப்பட்ட பின்னர் பெயர்களை திருத்துமாறு கோரப்படும்போது அச்சுப்பிழைகள் தவிர்ந்த வேறு கோரிக்கைகள் தொடர்பாக கவனஞ் செலுத்தப்படமாட்டாது. விண்ணப்பப் படிவங்கள் தெளிவாகவும், பிழையின்றியும் பூரணப்படுத்தப்படல் வேண்டும். அவ்விதம் அமையாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

5.5 அறநெறிப் பாடசாலையின் கணினி இலக்கம், மற்றும் முகவரி என்பன பிழையின்றிக் குறிப்பிடப்படுவதோடு, அறநெறிப் பாடசாலையின் முகவரியில் மாற்றம் இருப்பின் அதனை அறியத் தருவதோடு, அறநெறிப் பாடசாலையின் தலைமையாசிரியருடன் தொடர்பு கொள்ளத்தக்க தொலைபேசி இலக்கமொன்றும் குறிப்பிடப்பட வேண்டும்.

5.6 விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல் தொடர்பாகவும், தகைமை கொண்டுள்ளமை தொடர்பாகவும், விண்ணபப்படிவத்தை உறுதிப்படுத்தும் அறநெறிப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் உறுதிப்படுத்த அல்லது பொறுப்பேற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

06. **பரீட்சைக் கட்டணம்:**

இப்பரீட்சைக்குரிய கட்டணம் ரூபா 200.00 ஆகும். ஆயினும், முதற்தடவையாக இப் பரீட்சையிற் தோற்றுபவர்களுக்கு இக்கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்படும். நூனசித்தி பாடத்தைப் பூரணப்படுத்திக் கொள்வதற்கான கட்டணம் ரூபா 50.00 ஆகும்.

6.1 குறித்த அறநெறிப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்துவதற்குரிய அனைத்து விண்ணப்பதாரிகளின் முழுத்தொகையையும், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வருமானத் தலைப்பு இல. 20-03-02-13 இற்குச் செலுத்தத்தக்கதாக, நாட்டின் எந்தவொரு தபால் நிலையத்திலும் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக்கொள்வதோடு, அதனை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பிவைத்தல் வேண்டும். (பற்றுச் சீட்டின் புகைப்படப் பிரதி ஒன்றைப் பேணிக்கொள்வது பயனளிப்பதாகும்) எக் காரணத்தைக் கொண்டும் இப்பரீட்சைக்கெனச் செலுத்தப்பட்ட கட்டணம் வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ அல்லது மீளப்பெறவோ இயலாததாகும்.

07. **அனுமதி அட்டை:**

பரீட்சைக்கு இணைத்துக் கொள்ளப்படும் ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் மூலம் அனுமதி அட்டை உரிய அறநெறிப் பாடசாலை அதிபர் ஊடாக விநியோகிக்கப்படும்.

7.1 பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரிகளும், தாம் முதலாவதாகப் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்திலேயே தமக்குரிய அனுமதிஅட்டையில், தமது ஒப்பத்தைச் சான்றுப்படுத்திக் கொண்டு பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்க வேண்டும். எவரேனும் விண்ணப்பதாரி ஒருவர், தமது அனுமதிஅட்டையை ஒப்படைக்காது இருப்பின் அல்லது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தனால் தமக்கென நியமிக்கப்பட்டிருந்த பரீட்சை நிலையம் தவிர்ந்த வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றியிருப்பின் அவ்விண்ணப்பதாரியின் பரீட்சை விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதிஅட்டையில் விண்ணப்பதாரியின் கையொப்பம், இந்து அறநெறிப் பாடசாலை தலைமை ஆசிரியர் மூலம் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு 07 தினங்களுக்கு முன்னர் அனுமதிஅட்டை கிடைக்காதிருப்பின் உரிய அறநெறிப் பாடசாலைத் தலைவர் மூலம் அது தொடர்பாக, தாமதமன்றி பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு அறிவிக்கப்பட வேண்டும். அத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் அனுப்பிய பதிவுச்சிட்டையின் பிரதியுடன் கீழ்க்குறித்த விபரங்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.

1. பரீட்சையின் பெயர் :
2. அறநெறிப் பாடசாலையின் பெயர் :
3. அறநெறிப் பாடசாலையின் முகவரி :
4. அறநெறிப் பாடசாலையின் கணினி இலக்கம் :
5. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் முகவரி :
6. விண்ணப்பதாரியின் முகவரி :
7. விண்ணப்பதாரியின் தொலைபேசி இலக்கம் :
8. அறநெறிப் பாடசாலை அதிபரின் தொலைபேசி இலக்கம் :
9. விண்ணப்பித்த பரீட்சை நிலையம் /மாவட்டம் :

08. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் :**

பரீட்சார்த்தி, பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்திப்படத்தக்கவாறான தமது ஆளடையாளத்தை நிரூபித்துக் கொள்ள வேண்டும். அதற்கென கீழ்க்குறித்த ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

7.1 தேசிய ஆளடையாள அட்டை
7.2 செல்லுபடியான கடவுச்சீட்டு
7.3 செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்

அவ்வாறே, விண்ணப்பதாரிகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளத் தக்கவாறு, முகம் மற்றும் இரு காதுகளையும் மறைத்துக்கொள்ளாதவாறு பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். அங்ஙனம் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை நிலையத்தினுள் உட்செல்ல

அனுமதிக்கப்படமாட்டார். மேலும், பரீட்சை நிலையத்தினுள் உள்நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிந்து வெளியே செல்லும்வரை பரீட்சை மேற்பார்வையாளர் பரீட்சார்த்தியை அடையாளங்கண்டு கொள்ளத்தக்கவாறு முகம் மற்றும் இரு காதுகளை மறைப்பதிலிருந்தும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

09. **சித்தி தொடர்பாகத் தீர்மானித்தலும் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடலும்:**

இப்பரீட்சைக்குரிய பாடங்கள் ஐந்து ஆகும். பரீட்சையிற் சித்திபெறுவதற்கு ஒவ்வொரு பரீட்சார்த்தியும் குறித்த ஐந்து பாடங்களிலும் சித்திபெற வேண்டும். எனினும், ஒரே தடவையில் ஐந்து பாடங்களில் ஒரு பாடத்தில் மட்டும் சித்தி பெறத் தவறுவோர் நூன சித்தி பெற்றோராகக் கருதப்படுவர். இத்தகைய பரீட்சாத்திகள், பரீட்சைக்குத் தோற்றிய வருடத்திலிருந்து தொடர்ந்துவரும் மூன்று தடவைக்குள் நூன சித்திபெற்ற பாடத்திற்குத் தோற்றி, சித்தி பெறுவதன் மூலம் பெறுபேற்றினைப் பூரணப்படுத்திக் கொள்ள முடியும். நூன சித்திபெறும் பரீட்சாத்திகள், தமது சித்தியைப் பூரணப்படுத்திக் கொள்ள கட்டாயமாக நூன சித்தி பெற்ற பாடத்திற்காக மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். நூன சித்திக்கென விண்ணப்பிக்கும்போது, ஏனைய பாடங்களுக்காகத் தோற்றிய வருடம், பரீட்சை இலக்கம், தோற்றிய பாடங்கள், பெற்ற தரம் என்பவை குறிப்பிடப்படல் வேண்டும்.

9.1 ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய வினாப்பத்திரத்திற்கு 100 புள்ளிகள் வழங்கப்படுவதோடு சித்திபெறும் தரத்திற்கு உரிய புள்ளி வரம்புகள் மற்றும் குறியீடுகள் கீழ்வருமாறு:

| புள்ளிவீச்சு | தரம் | குறியீடு |
|---|---|---|
| 0-34 | சித்தியின்மை | F |
| 35-54 | சித்தி | S |
| 55-69 | திறமைச்சித்தி | C |
| 70-100 | விசேட திறமைச்சித்தி | D |

9.2 பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளின் பட்டியல், குறித்த அறநெறிப் பாடசாலை அதிபருக்குத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

10. **சான்றிதழ் :**

இப்பரீட்சைக்குத் தோற்றி சித்திபெறுகின்ற ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உரிய சான்றிதழ்கள் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் மூலம் அறநெறிப் பாடசாலை அதிபருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். மேற்படி பரீட்சைக்குத் தோற்றி சித்திபெற்றபோதும் சான்றிதழ் கிடைக்கப் பெறாத பரீட்சார்த்தி ஒருவர், அறநெறிப் பாடசாலை அதிபர் மூலமாக,

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
நிறுவனம் சார் பெறுபேறுகள் கிளை,
த.பெ.இல -1503,
கொழும்பு.

எனும் முகவரிக்கு அறிவித்து விபரத்தினைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

11. **விடைத்தாள் மீள்பரிசீலனை செய்தல் :**

பரீட்சைத் திணைக்கள இணையத்தளத்தில் பரீட்சை முடிவுகள் வெளியாகி 14 தினங்களுக்குள் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்படும் படிவங்கள் மூலம் இந்து அறநெறிப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் / பொறுப்பாசிரியர் கோரியிருப்பின் விடைத்தாள் மீளாய்வு செய்வதற்கு வாய்ப்பளிக்கப்படும். இதற்கான கட்டணத் தொகை ஒவ்வொரு தடவையிலும் மாற்றம்பெற வாய்ப்பு உள்ளது. எக்காரணத்தை முன்னிட்டும், பரீட்சார்த்திகளுக்கோ அன்றி அவர்களது பிரதிநிதிகளுக்கோ விடைத்தாள்களை சோதித்தறிய வாய்ப்பளிக்கப்படமாட்டாது.

12. **பாடத்திட்டம்**:

இப்பரீட்சை ஐந்து வினாத்தாள்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாத்தாள்களும் மூன்று மணித்தியாலங்கள் கொண்டதாக அமையும். வினாப்பத்திரங்கள் பின்வருமாறு :

1. வேதங்களும் ஆகமங்களும்
2. சமய ஞானிகளும் சமயப் பெரியார்களும்
3. சைவ சமய வரலாறு
4. பன்னிரு திருமுறைகள்
5. கோயில்களும் கலைகளும்

ஒவ்வொரு வினாப்பத்திரங்களும் பகுதி I, பகுதி II, பகுதி III என அமையும்.

பகுதி I மொத்தமாக இருபது வினாக்கள் கொடுக்கப்படும். இருபது வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும். ஒரு வினாவிற்கு இரண்டு புள்ளி வீதம் மொத்தம் நாற்பது புள்ளிகள் வழங்கப்படும். $(20 \times 2 = 40)$

பகுதி II, இல் நான்கு வினாக்கள் கொடுக்கப்படும். அதில் விரும்பிய ஏதாவது இரண்டு வினாக்களைத் தெரிவு செய்தல் வேண்டும். மொத்தமாக முப்பது புள்ளிகள் வழங்கப்படும். $(15 \times 2 = 30)$

பகுதி III, இல் நான்கு வினாக்கள் கொடுக்கப்படும். அதில் விரும்பிய ஏதாவது இரண்டு வினாக்களைத் தெரிவு செய்தல் வேண்டும். மொத்தமாக முப்பது புள்ளிகள் வழங்கப்படும். $(15 \times 2 = 30)$

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்படவுள்ள இந்து தர்மாசிரியர் சான்றிதழ் பத்திரப் பரீட்சைக்குரிய பாடத்திட்டம் இவ் அறிவித்தலின் இறுதியில் இணைப்பு - 2 இல் காட்டப்பட்டுள்ளது.

13. இந்நிபந்தனைகள் மற்றும் பாடத்திட்டத்திற் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்பச் செயற்படுவதற்கு அனைத்துப் பரீட்சை விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டிருக்கும் அதேவேளை, இந்நிபந்தனைகளிற் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அவை , பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிவிற்கேற்பத் தீர்மானிக்கப்படுவனவாகும்.

14. தமிழ் மொழி மூலம் மாத்திரமே அறிவித்தல்கள் வெளியிடப்படும். அறிவித்தலுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எச். ஜே. எம். சீ. அமித் ஜயசுந்தர,
பரீட்சை ஆரைணயாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த,
பத்தரமுல்ல.

**இணைப்பு - 02**

## இந்து தர்மாசிரியர் பரீட்சை

**வினாப்பத்திரம் 1 இற்கான பாடத்திட்டம்**

### வேதங்களும் ஆகமங்களும்

இந்து சமயத்துக்கு மூலாதாரங்களான வேதங்கள், ஆகமங்கள் என்பவற்றைப் பற்றியதாக இவ் வினாப்பத்திரம் அமையும். கீழ்வரும் விடயங்கள் முக்கியமானவை.

1. வேதங்களும் அவற்றின் பிரிவுகளும் : சங்கிதை, பிரமாணம், ஆரண்யகம், உபநிடதம்
2. வேதகால ரிஷிகளும், முனிவர்களும்
3. வேதங்கள் வர்ணிக்கும் தேவர்கள்
4. வழிபாட்டு முறைகள்
5. வேதங்களில் ஒழுக்கம், நீதி பற்றிய சிந்தனைகள்
6. வேதகாலச் சமுதாயம்

7. வேதங்களும், இந்து சமயக் கிரியைகளும், சடங்குகளும்
8. உபநிடதச் சிந்தனைகள் : பிரம்மம், ஆத்மா, வினைப்பயன், மறுபிறப்பு
9. ஆகமங்களின் விளக்கமும் பொருளடக்கமும்
10. ஆகமங்களும் ஆலய வழிபாடும்

**வினாப்பத்திரம் 2 இற்கான பாடத்திட்டம்**

**சமய ஞானிகளும் சமயப் பெரியார்களும்**

இந்து சமயத்தின் நெடுங்கால வரலாற்றில் உள்ள பல்வேறு கட்டங்களில் அதனை அபிவிருத்தி செய்வதிலும் மேன்மைப்படுத்து வதிலும் பங்குகொண்ட ரிஷிகள், ஞானிகள், பாவலர்கள், தத்துவதரிசிகள் சமய இலக்கியங்களின் தலைவர்கள் முதலியோரைப் பற்றிய தெளிவான அறிவைப் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ளுமாறு செய்வதே இப்பாடத்தின் குறிக்கோளாகும். கீழ்வரும் விடயங்கள் சிறப்பான கவனத்தைப்பெறும்.

1. ஆதி சங்கரர்
2. இராமானுஜர்
3. மத்துவாச்சாரியாரும், அவரது சிந்தனைகளும்
4. ஸ்ரீ சைதன்யர், துளசிதாசர்
5. இராமானந்தர் , கபீர்தாஸர், மீராபாய்
6. இராஜாராம் மோகன் ராயும், பிரம்மசமாஜமும்
7. சுவாமி தயானந்தரும், ஆரிய சமாஜமும்
8. இராமகிருஷ்ணர்
9. சுவாமி விவேகானந்தர்
10. சுவாமி சின்மயானந்தரும், சின்மயா இயக்கமும்

**வினாப்பத்திரம் 3 இற்கான பாடத்திட்டம்**

**சைவ சமய வரலாறு**

தென்னாசியா, தென்கிழக்காசியா என்பவற்றிலுள்ள சைவசமய வரலாறு பற்றி பரீட்சார்த்திகளிடமிருந்து ஒரு அறிவுபூர்வமான, தெளிவான விளக்கம் எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்விரு பிராந்தியங்களிலும் உள்ள அரசியல், சமூக, பண்பாட்டு மாற்றங்களோடு தொடர்புபடுத்திச் சைவசமய வளர்ச்சியைப் படித்தல் வேண்டும். தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் ஏற்பட்ட சைவசமய வளர்ச்சிகள் விசேட கவனத்தைப்பெறும். இலக்கியம், சாசனங்கள், பண்பாட்டுச்சின்னங்கள் என்பவற்றின் அடிப்படையிலே சமய வளர்ச்சிகளை விளக்குதல் வேண்டும்.

பாடவிதானத்தில் கீழ்வரும் விடயங்கள் மிக முக்கியமான அம்சங்களாகும்:

1. இதிகாச புராணங்களில் சைவம்
2. ஆதிகால தமிழர் சமுதாயத்தில் சைவம்
3. பல்லவர் காலத்துப் பக்தி நெறி
4. சோழர் காலத்திற் சைவ சமயம்
5. காஷ்மீர் சைவம்
6. வீர சைவம்
7. சைவசித்தாந்த சாஸ்திரங்கள்
8. ஆதீனங்களின் சமயப்பணி
9. ஆறுமுக நாவலரும், சைவ சமய மறுமலர்ச்சியும்
10. சுவாமி விபுலானந்தரும் இலங்கையில் இராமகிருஸ்ண இயக்கமும்

**வினாப்பத்திரம் 4 இற்கான பாடத்திட்டம்**

**பன்னிரு திருமுறைகள்**

இப் பாடத்திலே பன்னிரு திருமுறைகளில் விளக்கப்படும் சைவ சமய சிந்தனைகள், ஆன்மீக அனுபவங்கள் சமய தத்துவங்கள் என்பவற்றில் விசேட கவனம் செலுத்தப்படும். பண்ணிசையின் வளர்ச்சி, கோயில்கள் அவற்றின் இயற்கைச் சூழல், அவற்றின் சமுதாயப் பின்னணி என்பன பற்றிய தெளிவான விளக்கம் அவசியமானது.

கீழ்வரும் விடயங்கள் மிகுந்த கவனத்திற்குரியவை:

1. பன்னிரு திருமுறைகளின் தொகுப்பும், அவற்றின் அடங்கன் முறையும்
2. நாயன்மார் வரலாறு
3. திருமுறைகளில் முப்பொருள்
4. திருமுறைகளிற் கோயில் வழிபாடு
5. பெரியபுராணம்
6. வினைப்பயனும் விமோசனமும்

**வினாப்பத்திரம் 5 இற்கான பாடத்திட்டம்**

**கோயில்களும் கலைகளும்**

இப்பாடத்திலே கோயில்கள் தொடர்பான கட்டடக்கலை, சிற்பக்கலை, நடனக்கலை, இசைக்கலை, ஓவியக்கலை என்பவற்றில் விசேட கவனஞ் செலுத்தப்படும். பரீட்சார்த்திகள் இக்கலைகள் தொடர்பான சாஸ்திர நூல்களைப் பற்றியும் கோயிலமைப்புகள், பண்பாட்டுச் சின்னங்கள் என்பன பற்றியும் தெளிவான விளக்கம் பெற்றிருக்க வேண்டும். நாகரம், வேசரம், திராவிடம் என்னும் கலைப்பாணிகளைப் பற்றிய விளக்கம் அவசியமானது.

கோயில்களும் கலைகளும் என்னும் பாடம் பற்றிய வினாப்பத்திரம் கீழ்வரும் அம்சங்களை உள்ளடக்கியதாக அமையும் :

1) சிற்ப சாஸ்திரம் 2) நாட்டியசாஸ்திரம் 3) ஓவிய நூல் 4) இசைநூல்கள் 5) பண்பாட்டுச் சின்னங்கள்

**கட்டடக் கலை**

(1) கோயிலமைப்பின் பிரதான அம்சங்களும், அவற்றின் வளர்ச்சிகளும்
(2) பல்லவர் காலத்துக் கோயில்களும், சிற்பங்களும்
(3) சோழர் காலத்திற் திராவிட கலைப்பாணி
(4) விஜயநகர, நாயக்கர் காலத்துக் கோயில்கள்

**சிற்பக் கலை**

(1) கடவுட் படிமங்கள்
(2) தேவகோட்டச் சிற்பங்கள்
(3) கதைகளை விளக்கும் சிற்பங்கள்
(4) துவாரபாலகர் சிற்பங்கள்
(5) மனிதரின் உருவச் சிற்பங்கள்
(6) சமய குரவரின் படிமங்கள்
(7) அலங்கார வேலைப்பாடுகள்

**நடனக்கலை**

(1) பரதம், கதக்களி, கதக், யக்'கானம், குச்சுப்புடி, ஒடிஸி, மணிப்புரி ஆகிய நாட்டிய மரபுகள்
(2) கோயிற் சிற்பங்களும் நாட்டிய கரணங்களும்
(3) பரத நாட்டியத்தின் வரலாறும் நவீனகால வளர்ச்சிகளும்

**ஓவியக் கலை**

(1) ஓவியங்களும் கலைக் கோட்பாடுகளும்
(2) அஜந்தா ஓவியங்கள்
(3) பல்லவர் கால, சோழர் கால ஓவியங்கள்
(4) இராச புத்திரரின் ஓவியங்கள்

**இசைக் கலை**

(1) தேவாரப் பண்ணிசை
(2) கர்நாடக சங்கீத மரபின் வளர்ச்சி தியாகராஜர், முத்துஸ்வாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள், சதாசிவ பிரம்மேந்திரர், சுவாதித் திருநாள் முதலியோர் மூலம் ஏற்பட்ட அபிவிருத்திகள்.

**அட்டவணை 01**

| *மாவட்ட /நகர இலக்கம்* | *மாவட்டம் / நகரம்* |
|---|---|
| 01 | கொழும்பு |
| 02 | கம்பஹா |
| 03 | களுத்துறை |
| 04 | கண்டி |
| 05 | மாத்தளை |
| 06 | நுவரெலியா |
| 07 | காலி |
| 08 | மாத்தறை |
| 09 | அம்பாந்தோட்டை |
| 10 | யாழ்ப்பாணம் |
| 11 | மன்னார் |
| 12 | வவுனியா |
| 13 | முல்லைத்தீவு |
| 14 | கிளிநொச்சி |
| 15 | மட்டக்களப்பு |
| 16 | அம்பாறை |
| 17 | திருகோணமலை |
| 18 | குருநாகல் |
| 19 | புத்தளம் |
| 20 | அநுராதபுரம் |
| 21 | பொலநறுவை |
| 22 | பதுளை |
| 23 | மொணராகலை |
| 24 | இரத்தினபுரி |
| 25 | கேகாலை |

07-660

## கல்வி அமைச்சு

## தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை
## எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகம் - கட்டுநாயக்கா

தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறிக்காக பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் – 2024 குழு
(கோட்பாட்டு கற்கைத் தவணைகள் எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகத்திலும் நிறுவனத்தின்
தேவைக்கமைய நிகழ்நிலை முறையிலும்)

கட்டுநாயக்கா, எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறி 2024 குழுவிற்கு பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் பொருட்டு இலங்கைப் பிரசைகளிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்குத் தேவையான கல்வித் தகைமைகள் :**

கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் பின்வரும் பந்தி 1.1 இல் அல்லது பந்தி 1.2 இல் காட்டப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைறெிக்காக விண்ணப்பிக்கலாம்.

1.1. கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சைக்குத் தோற்றிய அமர்வுகளின் எண்ணிக்கை 03 இற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். அவற்றுள் ஓர் அமர்வில் பின்வரும் பாடப் பிரிவுகளுள் ஒரு பாடப்பிரிவில் மூன்று (03) பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

- பௌதீக விஞ்ஞானப் பிரிவு (இணைந்த கணிதம், பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் அல்லது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்).

- பொறியியல் தொழில்நுட்பப் பிரிவு (பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உட்பட 03 பாடங்கள்).

- உயிரியல் விஞ்ஞானப் பிரிவு (உயிரியல், பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல்).

- உயிரியல் முறைமை தொழில்நுட்பப் பிரிவு (உயிரியல் முறைமை தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உட்பட 03 பாடங்கள்).

மற்றும்

- கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சையில் 03 இற்கு மேற்படாத அமர்வுகளில் ஆங்கில மொழிக்கு திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

1.2. இலண்டன் உயர்தரப் பரீட்சைக்கு (London Advance Level Examination - Edexcel/ Cambridge) 03 இற்கு மேற்படாத அமர்வுகளில் தோற்றி, அவற்றில் ஓர் அமர்வில் கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகியவற்றில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

02. **விண்ணப்பதாரியின் வயதெல்லை.**- 2024.06.30 ஆந் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும் 25 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அதற்கமைய, 2006.06.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரும், 1999.06.30 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னரும் பிறந்தவர்கள் மாத்திரம் இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதி பெறுகின்றனர்.

03. **பயிற்சிக்காலம் பற்றிய விபரம்.**- இது முழுநேர கற்கைநெறியொன்றாகும்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு முழுக் கற்கைநெறிக் காலம் 18 மாதங்களாகும்.

- முதலாம் மற்றும் இரண்டாம் கோட்பாட்டு கற்கைத் தவணைகள் எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகத்தில் – 12 மாதங்கள்

- கைத்தொழில் பயிற்சி வெளிக் கைத்தொழில் நிறுவகங்களில் – 06 மாதங்கள்

04. **எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகத்தினால் நடாத்தப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறிகள் பின்வருமாறு அமையும்**:

- சிவில் பொறியியல் தொடர்பான தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறி

- மின்சார மற்றும் தன்னியக்க பொறியியல் தொடர்பான தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறி

- கணினி முறைமை மற்றும் வலையமைப்பாக்கப் பொறியியல் தொடர்பான தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறி

- எந்திரவியல் பொறியியல் தொடர்பான தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறி

05. **பாடநெறி மொழிமூலம்**.- ஆங்கில மொழி

06. **சான்றிதழ் வழங்கல்**.-

கற்கைநெறிக்குரிய கோட்பாடு மற்றும் செயன்முறைப் பயிற்சிகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து சித்திபெறும் பயிலுநர்களுக்கு, நிறுவகத்துடன் உள்ள எல்லாக் கடப்பாடுகளிலிருந்தும் அவர்கள் விடுவிக்கப்பட்டதன் பின்னர் உரிய டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.

**குறிப்பு** :

எதிர்காலத்தில், மேலே பந்தி 4 இல் காட்டப்பட்டுள்ள துறைகள் சார்ந்ததாக உயர் தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறிகளை ஆரம்பிப்பதற்கு எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகம் திட்டமிட்டிருப்பதுடன், இந்த தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து சான்றிதழைப் பெற்றுக்கொள்வதானது, உரிய துறையில் உயர் தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறியை தொடர்வதற்கான கல்வித் தகைமையாக கருதப்படும்.

07. **தெரிவு செய்யும் முறை** :

7.1 ஒரு கற்கைநெறிக்காக மாணவர் குழுவொன்றில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த பயிலுநர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க குறைந்த விண்ணப்பதாரிகள் ஏதேனுமொரு கற்கைநெறிக்காக விண்ணப்பித்திருக்கும் சந்தர்ப்பத்தில், அக்கற்கைநெறியை குறித்த வருடத்தில் ஆரம்பிப்பது அல்லது ஆரம்பிக்காமலிருப்பது பற்றிய தீர்மானத்தை எடுக்கும் உரிமை நிறுவகத்தைச் சாரும்.

7.2 ஏதேனுமொரு கற்கைநெறிக்கு விண்ணப்பித்திருக்கும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையானது, அக்கற்கைநெறிக்கு சேர்த்துக்கொள்ளக்கூடிய பயிலுநர்களின் எண்ணிக்கையிலும் பார்க்கக் கூடுதலாக இருக்கும் சந்தர்ப்பத்தில், நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற போட்டிப் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள், பந்தி 7.4 இல் காட்டப்பட்டுள்ளவாறு நேர்முகப் பரீட்சையொன்றுக்குத் தோற்றியதன் பின் உரிய கற்கைநெறிக்காக தெரிவு செய்யப்படுவார்கள்.

7.3 அவ்வாறு பந்தி 7.2 இல் காட்டப்பட்டுள்ளவாறு தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சையொன்றை நடாத்துவதற்கு நேருமாயின், அப்பரீட்சை தொடர்பான மேலதிக விபரங்கள் பரீட்சை நடைபெறுவதற்கு முன் நிறுவகத்தினால் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும் என்பதுடன், விண்ணப்பதாரிகள் நிறுவகத்தினால் தீர்மானிக்கப்படுகின்ற பரீட்சைக் கட்டணத்திற்கு உடன்படுதல் வேண்டும்.

7.4 கற்கைநெறியை தொடர்வதற்கான தகைமையை பரீட்சிப்பதற்காக, எல்லாக் கல்வித் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும் என்பதுடன், அந்நேர்முகப் பரீட்சையில் சித்தியெய்தும் விண்ணப்பதாரிகள் மட்டும் கற்கைநெறிக்காக தெரிவு செய்யப்படுவார்கள். பந்தி 7.2 இல் காட்டப்பட்டுள்ளவாறு போட்டிப் பரீட்சையொன்று நடைபெறும் பட்சத்தில், அதில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள் என்பதுடன், நேர்முகப் பரீட்சையில் சித்தியடையாத விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து, ஏனைய விண்ணப்பதாரிகளுக்கு, அவர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்கு வரிசை அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

08. **விண்ணப்பங்கள் :**

8.1 விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்தல் மற்றும் பரீட்சித்தல் நடவடிக்கைகளுக்கான கட்டணமாக ரூபா 1,500.00 வை, மக்கள் வங்கியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள, கட்டுநாயக்கா எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் மாணவர் நலன்புரி கணக்கு இலக்கம் 276-1-001-8-6351396 எனும் கணக்கிற்கு விண்ணப்பதாரியின் பெயரில் செலுத்துதல் வேண்டும். (இக்கட்டணமும் பந்தி 7.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணமும் இருவேறு கட்டணங்களாகும்). இந்த ரூபா 1,500.00 ஐ செலுத்திய பற்றுச்சிட்டின் மூலப் பிரதியை (Original Slip), உங்களுடைய விண்ணப்பப்படித்துடன் இணைத்து, எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். உரிய பற்றுச்சீட்டில் விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களுடன் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம், தொலைபெசி இலக்கம் முதலான விபரங்களை குறிப்பிடுவதும், அப்பற்றுச்சீட்டு வங்கிக் கிளையின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரொருவரினால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தலும் கட்டாயமாகும்.

(மேற்படி கட்டணம் உரிய முறையில் செலுத்தப்படாதிருத்தல்/வேறு ஒருவரின் பெயரில் பணம் செலுத்தப்பட்டிருத்தல்/ விண்ணப்பதாரி அல்லாத ஒருவரின் தகவல்கள் பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்டிருத்தல்/பற்றுச்சீட்டின் மூலப்பிரதி வங்கிக் கிளையின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்தப்படாதிருத்தல் போன்ற காரணிகளின் அடிப்படையில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும், விண்ணப்பதாரி தமது பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்).

8.2 உங்களது விண்ணப்பப்படிவத்துடன் அதிபரினால் சான்றுப்படுத்தப்பட்ட க. பொ. த. (சா/த) மற்றும் க. பொ. த. (உ/த) பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ்களின் பிரதிகளை அனுப்பி வைப்பது கட்டாயமாகும். அவ்வாறு அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பதிவுக்காக தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகளின் க. பொ. த. (சா/த) மற்றும் க. பொ. த. (உ/த) பரீட்சை பெறுபேற்றுச் சான்றிதழ்கள் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு, அவற்றின் பிழையற்ற தன்மை பரீட்சிக்கப்படும் அதற்கான செலவை விண்ணப்பதாரிகள் ஏற்றல் வேண்டும்.

8.3 விண்ணப்பப்படிவங்கள் மற்றும் கற்கைநெறி தொடர்பான மேலதிக விபரங்களை www.iet.edu.lk எனும் இணையத்தளத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

8.4 முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2024.08.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "நிருவாக உத்தியோகத்தர்/பதிவாளர், எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகம், கட்டுநாயக்கா" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறிக்காக பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2024" எனக் குறிப்பிடுதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்களும், நேரடியாக வந்து ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8.5 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படமாட்டாது.

09. தபாலில் காணாமல் போகும் விண்ணப்பங்கள் மற்றும் பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் தொடர்பில் எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகம் பொறுப்புக்கூறாது. தாமதங்களை தவிர்த்துக்கொள்ளும் வகையில் நேரகாலத்துடன் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரிகள் முக்கியமாக அறிவுறுத்தப்படுகின்றனர்.

10. **கற்கைநெறிக் கட்டணம் :**

தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறிக்கான கற்கைநெறிக் கட்டணம் - ரூபா 295,000.00

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) ப் பரீட்சைக்கு பௌதீகவியல் பாடப்பிரிவு (கணிதப் பிரிவு) அல்லாத பாடப் பிரிவில் தோற்றிய விண்ணப்பதாரியொருவர் தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறியைத் தொடர்வதற்கு தெரிவு செய்யப்பட்டால், கற்கைநெறியின் ஆரம்பத்தில் அவர், கணிதம் தொடர்பான அடிப்படை கற்கைநெறியொன்றை பின்பற்றி அதில் சித்தியெய்த வேண்டுமென்பதுடன், அக் கற்கைநெறிக்கான கட்டணமாக மேலே குறிப்பிடப்பட்ட கட்டணத்திற்கு மேலதிகமாக ரூபா 10,000.00 அறவிடப்படும்.

உயர் தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறிக்கான கற்கைநெறிக் கட்டணம், கற்கைநெறியை ஆரம்பிப்பது தொடர்பாக பிரசுரிக்கப்படுகின்ற வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படும்.

11. சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரமாகியிருக்கும் இவ் அறிவித்தலில் வாசகங்களுக்கிடையில் ஏதேனும் பொருத்தமின்மை அல்லது தவறு காணப்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கு அமைய மட்டுமே நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தலைவர்,
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை,
இல. 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிகட,
இராஜகிரிய.

03-667

---

## கடற்றொழில் அமைச்சு

## கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் (திணைக்களம்சார் நிறைவேற்று சேவை வகை) உதவிப் பணிப்பாளர் (கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள்) தரம் III இற்கு ஆட்சேர்பபு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2024

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் திணைக்களம் சார் நிறைவேற்று சேவை வகையின் தரம் III உதவிப் பணிப்பாளர் (கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2024 நவம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படவுள்ளது.

விண்ணப்பமானது இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் “Our Services” இன் கீழுள்ள “Online Applications-Recruitment Exams” ஊடாக பிரசுரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் விண்ணப்பங்களை நிகழ்நிலையூடாக (Online) மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலையூடான விண்ணப்பங்கள் 2024, யூலை 26 ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் ஏற்கப்படுவதுடன் 2024 ஆகஸ்ட் 23 ஆம் திகதி இரவு 9.00 மணியுடன் முடிவடையும்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் (திணைக்களம் சார் நிறைவேற்று சேவை வகை) உதவிப் பணிப்பாளர் (கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள்) பதவியில் காணப்படும் 03 வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக அவ்வறிவித்தலில் தரப்பட்டுள்ள தேவையான தகைமைகளை பூர்த்தி செய்கின்ற தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பதவியின் பொதுத்தன்மைக்கமைவாக கொள்கை உருவாக்கம், கட்டளை/உத்தரவு, முகாமைத்துவம் மற்றும் அது தொடர்பாக தீர்மானமெடுத்தல் போன்ற பணிகள் உள்ளடங்கியதும் நிறுவனத்தின் மிக உயர் நிறைவேற்று அலுவலருக்கு ஒதுக்கப்படும் ஒட்டுமொத்தப் பணிகளில் உள்ளடங்கும் பணிகளுக்கிடையில் பதவி குறித்து ஒதுக்கப்படும் பணிகள் ஒதுக்கக்கூடிய சேவை வகையாகும்.

01. **சேவை விதிமுறைகள் :**

I. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய முறை தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைரீதியான தீர்மானத்திற்கு உட்படுதல் வேண்டும்.

II. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று வருட தகுதிகூர் காலத்திற்குட்பட்டு நியமனம் செய்யப்படுவர்.

III. 2020.10.16 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி, குறிப்பிடப்பட்ட மற்றைய அரச மொழியில் / அரச மொழிகளில் நிபுணத்துவத்தை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

IV. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும் அரச நிதி ஒழுங்குவிதிகளுக்கும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகைக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களில் அடங்கியுள்ள விதிமுறைகளுக்கும் இந்நியமனமானது உட்படும்.

02. **சம்பள வகை மற்றும் அளவுத்திட்டம்** :

சம்பளக் குறியீட்டு இலக்கம் : SL 1 – 2016

சம்பள அளவுத்திட்டம் : ரூபா 47,615.00 - 10 × 1,335 - 08 × 1,630 - 17 × 2,170 - ரூபா 110,895.00

03. **கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்** :

விலங்கியல், உயிரியல், மீன் உயிரியல், சமுத்திர உயிரியல், கடற்றொழில்சார் உயிரியல், நுண்ணங்கியியல், உணவு அறிவியல் போன்ற பாடங்களில் குறைந்த பட்சம் ஒரு பாடத்தை பிரதான பாடமாகக் கொண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டமொன்றை பெற்றிருத்தல்.

04. **தொழில் தகைமை** : விசேட தகைமையாகக் கருதப்படும்.

05. **அனுபவம்** : விசேட தகைமையாகக் கருதப்படும்.

06. **உடற் தகைமை** :

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

07. **வேறு** :

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கைப் பிரஜையாயிருத்தல் வேண்டும்.
(ii) சிறந்த குணநலன்கள் கொண்டவராயிருத்தல் வேண்டும்..
(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அவசியமான தகைமைகளை விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற முடிவுத் திகதிக்கு முன்னர் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
(iv) தற்போது அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரியாயின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைவாக ஒழுக்காற்றுத் தண்டனையொன்று பெற்றிருத்தல் கூடாது.
(v) இப்பரீட்சைக்கு விசேட தேவையுள்ள விண்ணப்பதாரிகள் தோற்றவிருப்பின் அது பற்றி விண்ணப்பப்படிவத்தில் கட்டாயமாகக் குறிப்பிடுதல் வேண்டும். அத்துடன் ஏற்புடைய மருத்துவச் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

08 **வயது எல்லை** :

விண்ணப்ப முடிவுத்திகதிக்கு 21 வயதிற்கு குறையாது மற்றும் 35 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.(அதற்கமைவாக வயது தொடர்பான தகைமை பூர்த்தி செய்யப்படுவதற்கு 2003.08.23 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1989.08.23 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்)

09. **ஆட்சேர்ப்பு முறை** :

உதவிப் பணிப்பாளர் (கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள்) பதவிகளுக்கு எழுத்துப் பரீட்சையின் பெறுபேற்றினடிப்படையில் அதியுயர் புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகளிலிருந்து வெற்றிட எண்ணிக்கையை போன்று 125% ஆனவர்கள் பொது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு எழுத்துப் பரீட்சையின் புள்ளிகளின் திறமைத் தொடரிற்கமைவாக ஆட்சேர்ப்புச் செய்ய எதிர்பார்க்கும் எண்ணிக்கையானோர் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

(அ) ஆட்சேர்ப்பிற்கான போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.
(ஆ) விண்ணப்பதாரியொருவர் ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சையில் தான் விண்ணப்பித்த மொழி ஊடகத்தில் சகல வினாத்தாள்களிற்கும் விடையளித்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்ட மொழி ஊடகத்தை பின்னர் மாற்றுவதற்கு விண்ணப்பதாரிக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

10. **எழுத்துப் பரீட்சை**:

| வினாப்பத்திரம் | காலம் | அதியுயர் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. நுண்ணறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| 2. பொது அறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% |

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| 1. நுண்ணறிவு | பரீட்சார்த்தியின் தர்க்கரீதியான வர்ணணை மற்றும் பகுப்பாய்வுத்திறன், துல்லியமான நிகழ்வுகளை கணிப்பிடும் திறன், பொது அறிவு மற்றும் நுண்ணறிவை அளவிடலை நோக்காகக் கொண்டு இது தயாரிக்கப்படும். இது கணித பிரசினங்கள், பொது அறிவு, சுற்றாடல் சார்ந்த வினாக்கள் அடங்கிய பல்தேர்வு வினாப்பத்திரமாகும். |
| 2. பொது அறிவு | இலங்கையிலும் உலகிலும் நிதி, பொருளாதாரம், வணிகம், அரசியல், சர்வதேச தொடர்புகள், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், கல்வி, சுகாதாரம், விளையாட்டு சுற்றாடல், சமூக மற்றும் கலாசாரம் போன்ற துறைகள் தொடர்பான அடிப்படை அறிவை அளவிடுவதற்காக தயாரிக்கப்படும் சில வினாக்களுக்கு விடையளித்தல் எதிர்பார்க்கப்படுகிறது. |

11. **பொது நேர்முகத் தேர்வு** :

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை குழுவினால் அடிப்படைத் தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

12. **பரீட்சைக் கட்டணம்** :

பரீட்சைக் கட்டணம் ரூ.1,200.00 ஆகும்.கட்டணம் செலுத்தும் போது நிகழ்நிலை அமைப்பினூடாக வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டணக் கொடுப்பனவு முறைகளின் மூலம் மாத்திரமே கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

i. ஏதேனும் வங்கிக் கடனட்டை மூலம் (Any Bank Credit Card)
ii. இணைய வழிக் கொடுப்பனவு வசதியுள்ள ஏதேனும் வங்கிப் பற்று அட்டை மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)
iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறை (Online Banking Method of Bank of Ceylon)
iv. ஏதேனும் இலங்கை வங்கிக் கிளை ஒன்றின் மூலம் (Any Branch of the Bank of Ceylon)

**குறிப்பு** :-

(அ) மேற்குறிப்பிட்ட முறைகளின் மூலம் கொடுப்பனவு செய்யும் விதம் பற்றிய அறிவுறுத்தல்கள் இணையத்தில் பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கொடுப்பனவு கிடைக்கப் பெற்றது பற்றி குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் மூலமாக அறிவிக்கப்படும். பரீட்சைக்கான மொத்தப் பணத்தையும் செலுத்த வேண்டுமென்பதுடன் பரீட்சைக் கட்டணத்தை குறைவாக அல்லது அதிகமாக செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது ஏற்படுகின்ற சிக்கல்கள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

(இ) பரீட்சைக்காக செலுத்தப்படும் பணத்தை எக்காரணத்திற்காகவும் மீளச் செலுத்தவோ வேறு பரீட்சையொன்றிற்காக மாற்றம் செய்யவோ முடியாது.

13. **விண்ணப்பிக்கும் முறை** :

நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவத்தை ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலையூடாக சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப்படிவம் திணைக்களத்தினால் ஏற்றுக்

கொள்ளப்பட்டது/ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது பற்றி தொகுதியினுள் பிரவேசிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்ற தொலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி (SMS) ஒன்றின் மூலமோ மின்னஞ்சல் (E-mail) செய்தியாகவோ அறியத்தரப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தற் படிவத்தை (Instructions) தரவிறக்கம் செய்து கொள்க. விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது அவ்வறிவுறுத்தல்களை ஒழுங்காக பின்பற்றுக. பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும்.

அரசாங்க சேவையில் /அரசாங்க கூட்டுத்தாபனம் /நியதிச் சட்ட சபைகளில் தற்போது சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் நிறுவனத் தலைவரின் ஒப்புதலை பெற்றுக் கொண்டதன் பின்னர் இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தல் வேண்டும். அத்துடன் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவரை தற்போது வகிக்கும் சேவையிலிருந்து / பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதற்கான நிறுவனத் தலைவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கடிதமொன்றை நேர்முகப் பரீட்சை சபையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

**14. பரீட்சைக்குப் பிரவேசிப்பதற்கு தகைமை பெறுதல் :**

(அ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளுடையவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற அனுமானத்தின் மீது அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையினுள் உள்ள,விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச் சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழி ஊடகம், விண்ணப்பதாரியின் கையொப்ப அத்தாட்சிப்படுத்தல், ஏற்புடையதாயின் மாத்திரம் திணைக்களத் தலைவரின் சான்றுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நுழைவுச்சீட்டுகள் வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு நுழைவுச்சீட்டுகள் வழங்கப்பட்டவுடன் அது தொடர்பான பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் மூலம் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்களின் பின்னரும் நுழைவுச்சீட்டு கிடைக்காவிடின் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் அது தொடர்பாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறியத்தருதல் வேண்டும்.

அதில் விண்ணப்பதாரியின் முழுப்பெயர்,முகவரி,தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் என்பன குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு உசாவும் போது விண்ணப்பதாரி தம் வசம் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தின் பிரதி,பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபால் செய்யும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு என்பவற்றை தம் வசம் வைத்திருத்தல் அவசியமாகும். கொழும்பிற்கு அப்பாலுள்ள விண்ணப்பதாரிகள் தொலைநகல் மூலம் நுழைவுச்சீட்டின் பிரதியொன்றை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கமொன்றுடன் மேற்குறிப்பிட்ட தகவல்களை உள்ளடக்கிய விண்ணப்பக் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி உசாவுவது பயனுள்ளதாகும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரி ஒருவர் சரியான முறையில் கையொப்பத்தை உறுதிப்படுத்திய தனது நுழைவுச்சீட்டை பரீட்சை மண்டப அதிபரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். தனது நுழைவுச்சீட்டை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரியொருவர் தமக்கு குறித்துரைக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சை எழுத வேண்டுமென்பதுடன், ஒவ்வொரு விண்ணப்பதாரியும் உரிய பரீட்சை மண்டபத்தில் பரீட்சை எழுதுகின்ற முதல் நாளில் மண்டப அதிபரிடம் கையொப்பத்தை உறுதிப்படுத்திய நுழைவுச்சீட்டை ஒப்படைத்தல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பரீட்சை தொடர்பாக பின்பற்ற வேண்டிய விதிகளின் தொகுப்பொன்று இவ்வறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

(இ) விண்ணப்பதாரியொருவருக்கு நுழைவுச்சீட்டு வழங்குதலானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதிகளை பூர்த்தி செய்துள்ளதற்கான அங்கீகாரமாக கருதப்படல் கூடாது.

(ஈ) பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட விதிகள் மீறப்படின் பரீட்சைகள் ஆணையாளரினால் விதிக்கப்படுகின்ற தண்டனையொன்றிற்கு உள்ளாதல் வேண்டியேற்படலாம்.

15. **விண்ணப்பதாரியின் அடையாளம் :**

பரீட்சை விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்காகவும் மண்டப அதிபர் திருப்தியடையக்கூடிய சுய அடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும்.அதற்காக கீழ் காட்டப்படும் எந்தவொரு ஆவணமும் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய ஆளடையாள அட்டை;
II. செல்லுபடியான கடவுச்சீட்டு ;
III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும் பரீட்சை விண்ணப்பதாரிகள் அடையாளத்தை உறுதி செய்து கொள்ளக்கூடியவாறு முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும்.அவ்வாறு தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கின்ற விண்ணப்பதாரிகள் மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.இன்னும் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்ததிலிருந்து பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமானவாறு முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காதிருத்தல் வேண்டும்.

16. **கவனிக்க வேண்டியவை :**

(அ) கேட்கப்படும் சந்தர்ப்பத்தில் ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

(ஆ) தற்போது அரசாங்க சேவையில் பதவியொன்றை வகிக்கின்ற சகல விண்ணப்பதாரிகளும் தமது திணைக்கள / நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும். அத்துடன் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தனது கையொப்பத்தை தான் சேவையாற்றும் நிறுவனத்தின் தலைவரைக் கொண்டு அத்தாட்சிப்படுத்திக் கொள்ளுதல் கட்டாயமாகும்.

17. **பெறுபேறுகளை வெளியிடுதல் :**

எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றி தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளின் திறமைத் தொடரில் தயாரிக்கப்பட்ட, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவித்தலின் படி நிர்ணயிக்கப்பட்ட வெற்றிட எண்ணிக்கைக்கு சமனான எண்ணிக்கையான விண்ணப்பதாரிகளின் பெயர்கள் அடங்கிய பெறுபேற்று ஆவணம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரிடம் வழங்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேறுகள் அறிவிக்கப்படும் அல்லது www.results.exams.gov.lk இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

18. **போலியான தகவல்களை வழங்குதல் :**

விண்ணப்பதாரியொருவர் தகைமையற்றவரென வெளிப்படுத்தப்படுமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எச்சந்தர்ப்பத்திலேனும் அவருடைய விண்ணப்பத்தை ரத்துச் செய்வதற்கு இடமுண்டு. விண்ணப்பதாரியொருவர் சமர்ப்பித்துள்ள யாதேனுமொரு விடயம் அது பொய்யானதென்பதை அறிந்தே சமர்ப்பித்திருப்பதாக வெளிப்படுத்தப்படின் அல்லது ஏதேனும் முக்கியமான விடயமொன்றை வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவர் அரச சேவையிலிருந்து பணிநீக்கம் செய்யப்படுவதற்கு இடமுண்டு.இவ்வொழுங்கு விதிகளில் கருதப்பட்டிராத விடயங்கள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

19.வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நிரப்பாமலிருப்பதற்குமான உரிமை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு உள்ளது.

20.சிங்களம்,தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் ஒவ்வொரு மொழி வெளியீட்டிலும் ஏதேனும் ஒவ்வாமை/பொருத்தமின்மைகள் ஏற்படின் சிங்கள மொழி மூல அறிவித்தல் வலுவானதாகும்.

செயலாளர்,
கடற்றொழில் அமைச்சு.

மாளிகாவத்தை,
கொழும்பு 10.
2024.07.22

07-686

## கடற்றொழில் அமைச்சு

## கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்

### கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் (திணைக்களம்சார் நிறைவேற்று சேவை வகை) உதவிப் பணிப்பாளர் (கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள்/தொழில்நுட்பம்) தரம் III இற்கு ஆட்சேர்பபு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை -2024

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் திணைக்களம் சார் நிறைவேற்று சேவை வகையின் தரம் III உதவிப் பணிப்பாளர் (கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள்/தொழில்நுட்பம்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. இப்பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2024, நவம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படவுள்ளது.

விண்ணப்பமானது இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் "Our Services" இன் கீழுள்ள "Online Applications-Recruitment Exams" ஊடாக பிரசுரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் விண்ணப்பங்களை நிகழ்நிலையூடாக (Online) மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலையூடான விண்ணப்பங்கள் 2024, யூலை 26 ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் ஏற்கப்படுவதுடன் 2024, ஓகத்து 23 ஆம் திகதி இரவு 9.00 மணியுடன் முடிவடையும்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் (திணைக்களம் சார் நிறைவேற்று சேவை வகை) உதவிப் பணிப்பாளர் (கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள்) பதவியில் காணப்படும் 08 வெற்றிடங்கள் மற்றும் உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்) பதவியில் காணப்படும் 01 வெற்றிடம் ஆகியவற்றை பூர்த்தி செய்வதற்காக அவ்வறிவித்தலில் தரப்பட்டுள்ள தேவையான தகைமைகளை பூர்த்தி செய்கின்ற தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பதவியின் பொதுத்தன்மைக்கமைவாக கொள்கை உருவாக்கம், கட்டளை/உத்தரவு, முகாமைத்துவம் மற்றும் அது தொடர்பாக தீர்மானமெடுத்தல் போன்ற பணிகள் உள்ளடங்கியதும் நிறுவனத்தின் மிக உயர் நிறைவேற்று அலுவலருக்கு ஒதுக்கப்படும் ஒட்டுமொத்தப் பணிகளில் உள்ளடங்கும் பணிகளுக்கிடையில் பதவி குறித்து ஒதுக்கபடும் பணிகள் ஒதுக்கக்கூடிய சேவை வகையாகும்.

**01. சேவை விதிமுறைகள்:**

I. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உரித்தானது.
II. இப்பதவிக்கு நியமனம் பெறும் அலுவலர்கள் ஒரு வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர்.
III. 2020.10.16 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி, குறிப்பிடப்பட்ட மற்றைய அரச மொழியில்/ அரச மொழிகளில் நிபுணத்துவத்தை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
IV அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும் அரச நிதி ஒழுங்குவிதிகளுக்கும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகைக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களில் அடங்கியுள்ள விதிமுறைகளுக்கும் இந்நியமனமானது உட்படும்.

**02. சம்பள வகை மற்றும் அளவுத்திட்டம் :**

சம்பளக் குறியீட்டு இலக்கம் : SL 1 - 2016
சம்பள அளவுத்திட்டம் : ரூ. 47,615 - 10 × 1,335 - 08 × 1,630 - 17 × 2,170 - ரூபா 110,895.00

**03. கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் :**

I. **உதவிப் பணிப்பாளர் (கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள்)**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்

மற்றும்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் தரக்கட்டுப்பாட்டு அலுவலர், திட்ட உதவியாளர், கடற்றொழில் அலுவலர், கடற்றொழில் வள முகாமைத்துவ உதவியாளர், கடற்றொழில் பரிசோதகர்,

கடற்றொழில் சமூக அபிவிருத்தி உதவியாளர், கடற்றொழில் உரிம அலுவலர் போன்ற பதவிகளில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள 05 வருடங்களுக்கு குறையாத தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள அலுவலராக இருத்தல்.

அல்லது

(ஆ) கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் 05 வருட தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள அபிவிருத்தி அலுவலர் சேவையின் பதவியொன்றில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள அலுவலராக இருத்தல்.

அல்லது

(இ) கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் உள்ள கடற்றொழில் பரிசோதகர்,கடற்றொழில் அலுவலர், கடற்றொழில் சமூக அபிவிருத்தி உதவியாளர், கடற்றொழில் உரிம அலுவலர் போன்ற பதவிகளில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள 10 வருடங்களுக்கு குறையாத தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள அலுவலராக இருத்தல்

II. **உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்) :**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படும் இலத்திரனியல் மற்றும் தொலைத் தொடர்பு பொறியியல் பட்டம் அல்லது தொலைத் தொடர்புத் துறையுடன் தொடர்பான பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

மற்றும்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் கனிஷ்ட வானொலி அலுவலர், சிரேஷ்ட வானொலி அலுவலர் அல்லது தலைமை வானொலி அலுவலர் போன்ற பதவியொன்றில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள 05 வருடங்களுக்கு குறையாத தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள அலுவலராக இருத்தல்

அல்லது

(ஆ) க.பொ.த.(உ.த) பரீட்சையில் பழைய பாடத்திட்டமாயின் குறைந்தது 2 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 3 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் அல்லது புதிய பாடத்திட்டமாயின் குறைந்தது 2 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் கனிஷ்ட வானொலி அலுவலர், சிரேஷ்ட வானொலி அலுவலர் அல்லது தலைமை வானொலி அலுவலர் போன்ற பதவியொன்றில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள 10 வருடங்களுக்கு குறையாத தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள அலுவலராக இருத்தல்

அல்லது

(இ) ஆங்கில மொழி,சிங்கள மொழி, கணிதம் மற்றும் பௌதீகவியல் பாடங்களுடன் சிரேஷ்ட பாடசாலை சான்றிதழ் பரீட்சை அல்லது அப்பாடங்கள் அடங்கலாக 2 இற்கு மேற்படாத அமர்வுகளில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் குறைந்தது 06 பாடங்களில் திறமைச்சித்திகள் பெற்றிருத்தல் அல்லது அதை ஒத்த தகைமை பெற்றிருத்தல்.

மற்றும்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் கனிஷ்ட வானொலி அலுவலர், சிரேஷ்ட வானொலி அலுவலர் அல்லது தலைமை வானொலி அலுவலர் போன்ற பதவியொன்றில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள 15 வருடங்களுக்கு குறையாத தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள அலுவலராக இருத்தல்.

04. **தொழில் தகைமை** : ஏற்புடையதன்று.

05. **உடற் தகைமை** :

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

06. வேறு :

I. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக் கமைவாக ஒழுக்காற்றுத் தண்டனையொன்று பெற்றிருத்தல் கூடாது.

II. பதவியுயர்வுத் திகதிக்கு முன்னைய 05 வருட சேவைக் காலத்தினுள் அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கிணங்க திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதனை விட உயர்ந்த செயலாற்றுகையை காண்பித்திருத்தல்.

07. **வயது எல்லை :** ஏற்புடையதன்று.

08. **ஆட்சேர்ப்பு முறை :**

I. உதவிப் பணிப்பாளர் (கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள்),உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்) பதவிகளுக்கு எழுத்துப் பரீட்சையொன்றினதும் நேர்முகப் பரீட்சையொன்றினதும் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்துப் பரீட்சையின் பெறுபேற்றினடிப்படையில் அதியுயர் புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரி களிலிருந்து ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கும் எண்ணிக்கையை போன்று 125% ஆனவர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஆகிய இரண்டினதும் மொத்தப் புள்ளிகளின் திறமைத் தொடரிற்கமைவாக ஆட்சேர்ப்பு செய்ய எதிர்பார்க்கும் எண்ணிக்கையானோர் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

II. நியமனம் செய்யப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலாகும் திகதி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்..

III. ஆட்சேர்ப்பிற்கான போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில் மொழிகளில் நடாத்தப்படும்.

IV. விண்ணப்பதாரியொருவர் ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சையில் தான் விண்ணப்பித்த மொழி ஊடகத்தில் சகல வினாத்தாள்களிற்கும் விடையளித்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்ட மொழி ஊடகத்தை பின்னர் மாற்றுவதற்கு விண்ணப்பதாரிக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

09. **எழுத்துப் பரீட்சை**:

| பதவி | வினாப்பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடை வதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|---|
| உதவிப் பணிப்பாளர் (கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள்) | 01. கடற்றொழில் சட்டமும் ஒழுங்கு விதிகளும் | 3 மணித்தியாலம் | 100 | 50% |
| | 02. அலுவலக முறைமை, தாபன விதிக்கோவை மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் | 2 மணித்தியாலம் | 100 | 40% |
| | 03. நிதி ஒழுங்குவிதிகள் | 2 மணித்தியாலம் | 100 | 40% |
| உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்) | 01. கடற்றொழில் சட்டமும் ஒழுங்கு விதிகளும் / மின்னியல் மற்றும் வானொலித் தொடர்பாடல் பற்றிய அறிவு | 3 மணித்தியாலம் | 100 | 50% |
| | 02. அலுவலக முறைமை, தாபன விதிக்கோவை மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் | 2 மணித்தியாலம் | 100 | 40% |
| | 03. நிதி ஒழுங்குவிதிகள் | 2 மணித்தியாலம் | 100 | 40% |

9.1 **பரீட்சைக்கான பாடத்திட்டம் :**

| பதவி | வினாப்பத்திரத்தின் பெயர் | பாடத் திட்டம் |
|---|---|---|
| உதவிப் பணிப்பாளர் (கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள்) | 01. கடற்றொழில் சட்டமும் ஒழுங்குவிதிகளும் | I. 1996 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டம் மற்றும் அதற்குரிய அனைத்து திருத்த சட்டங்களில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகள் தொடர்பான அடிப்படை அறிவு<br>II. அவ்வப்போது விதிக்கப்பட்டுள்ள கடற்றொழில் ஒழுங்குவிதிகள் தொடர்பான அறிவு போன்ற விடயங்களை மதிப்பீடு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. |
| | 02. அலுவலக முறைமை, தாபன விதிக்கோவை மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் நடைமுறை விதிகள் | அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அலுவலக முறைமை தொடர்பான அடிப்படை அறிவு மற்றும் அவ்வறிவின் நடைமுறைப் பயன்பாடு என்பன பரீட்சிக்கப்படும்.<br>தாபன விதிக் கோவையின் கீழ் குறிப்பிடப்படும் அத்தியாயங்களை உள்ளடக்கியதாக அலுவலக முகாமைத் துவத்தின் போது முக்கியமான தாபன நடவடிக்கைகள் தொடர்பாக தெளிவைப் பெற்றுக் கொள்ளக்கூடியவாறு தயாரிக்கப்படும்.<br>VII ஆம் அத்தியாயம் - சம்பளங்கள்<br>IX ஆம் அத்தியாயம் - கட்டணங்கள்<br>XII ஆம் அத்தியாயம் - லீவு<br>XXVII ஆம் அத்தியாயம் - தொடர்பிணைப்பு வழி<br>XXXI ஆம் அத்தியாயம் - சங்கங்களின் நடாத்துகை, கருத்து வெளியீட்டு உரிமைகளைப் பிரயோகித்தல்<br>XXXII ஆம் அத்தியாயம் - அரசியல் உரிமைகளை அனுபவித்தல்<br>XLV ஆம் அத்தியாயம் - பொது நடத்தையும் ஒழுக்கமும்<br>XLVIII ஆம் அத்தியாயம் - ஒழுக்காற்று நடவடிக்கை முறை பற்றிய ஒழுங்குகள்<br><br>**அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகள்**<br>III ஆம் அத்தியாயம் - நியமனங்கள்<br>IV ஆம் அத்தியாயம் - சேவை யாப்பு மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறை<br>VI ஆம் அத்தியாயம் - நியமனங்களில் செல்வாக்குச் செலுத்தும் நியதிகளும் நிபந்தனைகளும்<br>VIII ஆம் அத்தியாயம் - தகுதிகூர் காலம், வேலை நேரம் மற்றும் நியமனத்தை நிரந்தரமாக்குதல்<br>XII ஆம் அத்தியாயம் - அரச உத்தியோகத்தர் ஒருவரை அரச சேவையிலிருந்து தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக விடுவித்தல்<br>XVI ஆம் அத்தியாயம் - சேவை நீடிப்பு மற்றும் ஓய்வு பெறச் செய்தல் |
| | 03. நிதி ஒழுங்குவிதிகள் | அரச அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அடிப்படை கணக்குகள் மற்றும் நிதிக் கட்டுப்பாட்டுப் புத்தகங்களின் பணிகள் பற்றிய தெளிவு மற்றும் அறிவை மதிப்பிட எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக நிதி ஒழுங்குவிதிகளின் முதலாம் தொகுதியின I முதல் IX வரை. |

| பதவி | வினாப்பத்திரத்தின் பெயர் | பாடத் திட்டம் |
|---|---|---|
| உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்) | 01. கடற்றொழில் சட்டமும் ஒழுங்குவிதிகளும் / மின்னியல் மற்றும் வானொலித் தொடர் பாடல் பற்றிய அறிவு | 1996 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டம் மற்றும் அதற்குரிய அனைத்து திருத்த சட்டங்களில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகள் தொடர்பான அடிப்படை அறிவு<br>II. அவ்வப்போது விதிக்கப்பட்டுள்ள கடற்றொழில் ஒழுங்குவிதிகள் தொடர்பான அறிவு போன்ற விடயங்களை மதிப்பீடு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.<br><br>**பின்வரும் விடயங்கள் தொடர்பான அறிவை அளவிடுதல்**<br>1. ரிசீவர்<br>A.M.F.M.N.M.SSB.CW சுப்பர்ஹெட்ரோடைன் (superhetrodyne) பணிகளும் கட்டுப்பாடும்<br>2. டிரான்ஸ்மிட்டர் (வானலை பரப்பி)—CW,AM,FM<br>ஒலிபரப்பு சமிக்ஞைகளை ஏற்றல், மோஸ்(MOS) சமிக்ஞைகளை அனுப்புதல்,திறனை உருவாக்கும் படிநிலை, SWR-SWR மீற்றர் பயன்பாட்டின் முக்கியத்துவம், ஹாமோனிக் மற்றும் போலிக் கதிர்வீச்சு<br>3. பரிமாற்றக் கோடுகள் மற்றும் குறிப்புகள்<br>குறுக்கான மற்றும் இணையான வழித்தடைகள்<br>4. தீவிரம்<br>செங்குத்து, இரட்டை, தீவிர இலாபம்,உயரத்தின் தாக்கம், முனைவாக்கம்<br>5. அலை பரவல்<br>அயனியாக்கம், அயன் கோளத்தின் அடுக்குகள், சூரியப் புள்ளிகள், MUF, LUF, OTF கட்ட எண், பாய்ச்சல் தூரம், பாய்ச்சல் வலயம், பயனுள்ள உயரம், வானலைகள், நேரடி அலை குறைப்பு.<br>6. செய்திப் பரிமாற்றத்தின் அங்கங்கள்<br>சைன் அலை, அலை நேரம், அதிர்வெண், ஸ்பீக்கர், மைக்ரோபோன், அளவீடு. பல்வேறு எதிர் நடவடிக்கைகள், டெசிபெல்,பற்றரி பராமரிப்பு தடை, திறன்வலு மற்றும் சாய்வு<br>7. அளவீட்டு உபகரணம்<br>VOM வெப்ப மின் இணைப்பு மானி, வால்வு வோல்ற்று மானி, அமுத்தமானி, SWR மானி,RF வோல்ற்று மானி, மெகர் (மின்காப்பளவி)<br>8. சுற்றுகள் மற்றும் பாகங்கள்<br>டிரான்ஸிஸ்டர் இயக்குவதற்கான அடிப்படைகள், டிரான்ஸிஸ்டர் புல விளைவு, உலோக ஒக்சைட் குறைகடத்தி டிரான்ஸிஸ்டர்கள், வால்வுள்ள AF மற்றும் RF ஒலிபரப்பு இயந்திரங்களின் எளிய சுற்றுக்களும் அடிப்படை சுற்றுக்களின் பணிகளும், ஒஸிலேட்டர் (அலையியற்றி), கலக்கி, பிழைகள், வலுவிநியோக அதிர்வெண் கோப்பாக்கம் தொடர்பான அறிவு பரிசோதிக்கப்படும். |

| பதவி | வினாப்பத்திரத்தின் பெயர் | பாடத் திட்டம் |
|---|---|---|
| | 02. அலுவலக முறைமை, தாபன விதிக்கோவை மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் நடை முறை விதிகள் | அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அலுவலக முறைமை தொடர்பான அடிப்படை அறிவு மற்றும் அவ்வறிவின் நடைமுறைப் பயன்பாடு என்பன பரீட்சிக்கப்படும்.<br><br>தாபன விதிக் கோவையின் கீழ் குறிப்பிடப்படும் அத்தியாயங்களை உள்ளடக்கியதாக அலுவலக முகாமைத்துவத்தின் போது முக்கியமான தாபன நடவடிக்கைகள் தொடர்பாக தெளிவைப் பெற்றுக் கொள்ளக்கூடியவாறு தயாரிக்கப்படும்.<br><br>VII ஆம் அத்தியாயம் - சம்பளங்கள்<br>IX ஆம் அத்தியாயம் - கட்டணங்கள்<br>XII ஆம் அத்தியாயம் - லீவு<br>XXVII ஆம் அத்தியாயம் - தொடர்பிணைப்பு வழி<br>XXXI ஆம் அத்தியாயம் - சங்கங்களின் நடாத்துகை, கருத்து வெளியீட்டு உரிமைகளைப் பிரயோகித்தல்<br>XXXII ஆம் அத்தியாயம் - அரசியல் உரிமைகளை அனுபவித்தல்<br>XLV ஆம் அத்தியாயம் - பொது நடத்தையும் ஒழுக்கமும்<br>XLVIII ஆம் அத்தியாயம் - ஒழுக்காற்று நடவடிக்கை முறை பற்றிய ஒழுங்குகள்<br><br>**அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகள்**<br><br>III ஆம் அத்தியாயம் - நியமனங்கள்<br>IV ஆம் அத்தியாயம் - சேவை யாப்பு மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறை<br>VI ஆம் அத்தியாயம் - நியமனங்களில் செல்வாக்குச் செலுத்தும் நியதிகளும் நிபந்தனைகளும்<br>VIII ஆம் அத்தியாயம் - தகுதிகூர் காலம், வேலை நேரம் மற்றும் நியமனத்தை நிரந்தரமாக்குதல்<br>XII ஆம் அத்தியாயம் - அரச உத்தியோகத்தர் ஒருவரை அரச சேவையிலிருந்து தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக விடுவித்தல்<br>XVI ஆம் அத்தியாயம் - சேவை நீடிப்பு மற்றும் ஓய்வு பெறச் செய்தல் |
| | 03. நிதி ஒழுங்குவிதிகள் | அரச அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அடிப்படை கணக்குகள் மற்றும் நிதிக் கட்டுப்பாட்டுப் புத்தகங்களின் பணிகள் பற்றிய தெளிவு மற்றும் அறிவை மதிப்பிட எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக நிதி ஒழுங்குவிதிகளின் முதலாம் தொகுதியின் I முதல் IX வரை. |

10. **தகுதி மதிப்பீட்டுக்கான நேர்முகப் பரீட்சை பின்வரும் புள்ளியிடல் நடைமுறையினடிப்படையில் நடைபெறும்**

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவின் மூலம் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

அந்த நேர்முகப் பரீட்சைக் குழுவினால் ஒவ்வொரு விண்ணப்பதாரியினதும் அடிப்படைத் தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

| | விடயம் | | அதிகபட்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. | **மேலதிக கல்வித் தகைமைகள்**<br><br>ஒவ்வொரு பதவியிலும் துறை தொடர்பாக பெற்றுள்ள மேலதிக கல்வித் தகைமைகள்<br><br>(a) பட்டப் பின் கற்கைநெறி<br>* பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டப் பின் கற்கை பட்டமாக இருத்தல் வேண்டும்.<br>(b) பட்டப் பின் கற்கை டிப்ளோமா<br>* பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்ட பாடநெறியாக இருத்தல் வேண்டும்.<br>(c) டிப்ளோமா (ஒரு வருடம் அல்லது அதை விட அதிக காலப்பகுதியுடைய)<br><br>**குறிப்பு** – a,b மற்றும் c இல் அதிக பட்ச தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். | <br><br><br>30<br><br><br>20<br><br>10 | **30** |
| 02. | **தொழில் தகைமைகள்**<br><br>ஒவ்வொரு பதவியினதும் விடயத்துறை தொடர்பாக பெற்றுள்ள தொழிற்றகைமைகள்<br><br>(a) ஒரு வருடத்திற்கு குறையாத பாடநெறியை பூர்த்தி செய்திருப்பின்<br>(b) 06 மாதங்களிற்கு குறையாத பாடநெறியை பூர்த்தி செய்திருப்பின்<br><br>(பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்தான பாடநெறி/ மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்தான பாடநெறி / கடற்றொழில் அமைச்சினால் ஒவ்வொரு பதவியினதும் விடயத்துறை தொடர்பாக வெளிநாட்டுப் பாடநெறிகளை வழங்கும் நிறுவனங்களாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்தான பாடநெறிக்கு புள்ளிகள் வழங்கப்படும்.)<br>**குறிப்பு** - a மற்றும் b இல் அதிக பட்ச தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். | <br><br><br><br>10<br>06 | **10** |
| 03. | **துறை தொடர்பான மேலதிக அனுபவம்**<br><br>விண்ணப்பங் கோரலுக்கான அறிவித்தலில் 3 ஆம் பந்தியில் "அ", "ஆ" , மற்றும் "இ" இல் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளின் அனுபவம் மாத்திரமே துறை தொடர்பான மேலதிக அனுபவமாக கருதப்படும். ஆரம்ப தகைமைகளுக்கு அப்பாற்பட்ட சேவைக் காலத்திற்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். விண்ணப்பங் கோரலுக்கான அறிவித்தலில் 3 ஆம் பந்தியில் "அ" மற்றும் "ஆ" இன் கீழான விண்ணப்பதாரிகளுக்கு 05 வருடங்களும் "இ" இன் கீழான விண்ணப்பதாரிகளுக்கு 10 வருடங்களும் ஆரம்ப தகைமைகளாக கருதப்படும்.<br><br>i. ஒவ்வொரு மேலதிக திருப்திகரமான சேவைக் காலத்திற்கும் வருடத்திற்கு 02 புள்ளிகள் வீதம்<br>ii. ஒவ்வொரு மேலதிக திருப்திகரமான சேவைக் காலம் 06 மாதத்திலிருந்து ஒரு வருடத்திற்கு 01 புள்ளி வீதம்<br><br>**குறிப்பு** - 06 மாதங்களிற்கு குறைவான சேவைக் காலத்திற்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. | | **20** |

| | விடயம் | | அதிகபட்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 04. | **கணினி அறிவு** | | **20** |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டமொன்றிற்கு தகவல் தொழில்நுட்பம் அல்லது கணினி அறிவியலை பிரதான பாடமாக கற்றிருத்தல் | 20 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது வேறு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிறுவனமொன்றிலிருந்து பெற்ற தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா | 16 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பெற்றுக் கொண்ட கணினி அறிவியல் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா அல்லது வேறு நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட கணினி அறிவியல் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான NVQ 5 அல்லது அதனை விட உயர் மட்ட டிப்ளோமா | 10 | |
| | (ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் அல்லது வேறு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிறுவனமொன்றில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடநெறிகளை பயின்று/பயிற்சித் திட்டங்களில் பங்கேற்று பெற்றுக் கொண்ட சான்றிதழ்கள்.<br>(ஒரு சான்றிதழுக்கு 02 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் இரண்டு சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும்)<br>**குறிப்பு** : உயர் தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். | 08 | |
| 05. | **ஆங்கில மொழித் தேர்ச்சி** | | **15** |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் ஆங்கில மொழி பிரதான பாடமாக உள்ளடங்கியதாக பெற்றுக் கொண்ட பட்டம் | 15 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் ஆங்கில மொழிக்கு பெற்றுக் கொண்ட டிப்ளோமா அல்லது வேறு நிறுவனமொன்றில் ஆங்கில மொழிக்கு பெற்றுக் கொண்ட SLQF 3 அல்லது அதனை விட உயர் மட்ட டிப்ளோமா அல்லது அரச பயிற்சி நிறுவனமொன்றில்/அரச பயிற்சி நிறுவனமொன்றுடன் இணைந்த நிறுவனமொன்றில் குறைந்த பட்சம் 1500 கற்றல் மணித்தியாலங்களை கொண்ட பாடநெறியை பயின்று பெற்றுக் கொண்ட ஆங்கில மொழிக்கான டிப்ளோமா | 10 | |
| | (இ) கல்விப் பொதுத் தராதர (உயர்தரம்) பரீட்சையில் (உள்நாட்டு அல்லது லண்டன்) ஆங்கில மொழிக்கு குறைந்த பட்சம் சிறப்புச்சித்தி பெற்றிருத்தல் அல்லது IELTS மொத்தப் புள்ளிகள் 6.5 அல்லது அதனை விட உயர்வு, TOEFL-IBT 79 அல்லது அதனை விட உயர்வு, , TOEFL-CBT 213 அல்லது அதனை விட உயர்வு, TOEFL –PBT 550 அல்லது அதனை விட உயர்வாயிருத்தல். . | 08 | |
| | (ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து ஆங்கில மொழிக்கு பெற்றுக் கொண்ட உயர் தராதர சான்றிதழ் அல்லது வேறு நிறுவனமொன்றில் ஆங்கில மொழிக்கு பெற்றுக் கொண்ட SLQF 2 தரத்திலான சான்றிதழ்.<br>**குறிப்பு** : உயர் தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். | 05 | |
| 06. | **நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கும் திறமைகள்** | | **05** |
| | **மொத்தப் புள்ளிகள்** | | **100** |

*11.* **பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணம் ரூ.1,200.00 ஆகும். கட்டணம் செலுத்தும் போது நிகழ்நிலை அமைப்பினூடாக வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டணக் கொடுப்பனவு முறைகளின் மூலம் மாத்திரமே கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

i. ஏதேனும் வங்கிக் கடனட்டை மூலம் (Any Bank Credit Card)
ii. இணைய வழிக் கொடுப்பனவு வசதியுள்ள ஏதேனும் வங்கிப் பற்று அட்டை மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)
iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறை (Online Banking Method of Bank of Ceylon)
iv. ஏதேனும் இலங்கை வங்கிக் கிளை ஒன்றின் மூலம் (Any Branch of the Bank of Ceylon)

**குறிப்பு :-**

(அ) மேற்குறிப்பிட்ட முறைகளின் மூலம் கொடுப்பனவு செய்யும் விதம் பற்றிய அறிவுறுத்தல்கள் இணையத்தில் பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கொடுப்பனவு கிடைக்கப் பெற்றது பற்றி குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் மூலமாக அறிவிக்கப்படும். பரீட்சைக்கான மொத்தப் பணத்தையும் செலுத்த வேண்டுமென்பதுடன் பரீட்சைக் கட்டணத்தை குறைவாக அல்லது அதிகமாக செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது ஏற்படுகின்ற சிக்கல்கள் தொடர்பில் இலங்கை பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

(இ) பரீட்சைக்காக செலுத்தப்படும் பணத்தை எக்காரணத்திற்காகவும் மீளச் செலுத்தவோ வேறு பரீட்சையொன்றிற்காக மாற்றம் செய்யவோ முடியாது.

*12.* **விண்ணப்பிக்கும் முறை :**

நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவத்தை ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலையூடாக சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப்படிவம் திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப் பட்டது/ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது பற்றி தொகுதியினுள் பிரவேசிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்ற தொலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி (SMS) ஒன்றின் மூலமோ மின்னஞ்சல் (E-mail) செய்தியாகவோ அறியத்தரப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தற் படிவத்தை(Instructions) தரவிறக்கம் செய்து கொள்க. விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது அவ்வறிவுறுத்தல்களை ஒழுங்காக பின்பற்றுக. விண்ணப்பப்படிவத்தின் அச்சுப்பிரதியொன்றை பெற்றதன் பின்னர் அதில் செய்யப்படுகின்ற எவ்வித திருத்தமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும்.

அரசாங்க சேவையில் / அரசாங்க கூட்டுத்தாபனம் / நியதிச் சட்ட சபைகளில் தற்போது சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் நிறுவனத் தலைவரின் ஒப்புதலை பெற்றுக் கொண்டதன் பின்னர் இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தல் வேண்டும். அத்துடன் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவரை தற்போது வகிக்கும் சேவையிலிருந்து / பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதற்கான நிறுவனத் தலைவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கடிதமொன்றை நேர்முகப் பரீட்சை சபையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

*13.* **பரீட்சைக்கு பிரவேசிப்பதற்கு தகைமை பெறுதல் :**

(அ) வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட தகைமைகளுடையவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற அனுமானத்தின் மீது அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையினுள் உள்ள, விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச் சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழி ஊடகம், விண்ணப்பதாரியின் கையொப்ப அத்தாட்சிப்படுத்தல், ஏற்புடையதாயின் மாத்திரம் திணைக்களத் தலைவரின் சான்றுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நுழைவுச்சீட்டுகள் வழங்கப்படும். விண்ணப்ப தாரிகளுக்கு நுழைவுச்சீட்டுகள் வழங்கப்பட்டவுடன் அது தொடர்பான பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் மூலம் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்களின் பின்னரும் நுழைவுச்சீட்டு கிடைக்காவிடின் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் அது தொடர்பாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறியத்தருதல் வேண்டும்.

அதில் விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் என்பன குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு உசாவும் போது விண்ணப்பதாரி தம்வசம் வைத்திருந்த

விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப் படிவத்தை தபால் செய்யும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு என்பவற்றை தம் வசம் வைத்திருத்தல் அவசியமாகும். கொழும்பிற்கு அப்பாலுள்ள விண்ணப்பதாரிகள் தொலைநகல் மூலம் நுழைவுச்சீட்டின் பிரதியொன்றை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கமொன்றுடன் மேற்குறிப்பிட்ட தகவல்களை உள்ளடக்கிய விண்ணப்பக் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி உசாவுவது பயனுள்ளதாகும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரி ஒருவர் சரியான முறையில் கையொப்பத்தை உறுதிப்படுத்திய தனது நுழைவுச்சீட்டை பரீட்சை மண்டப அதிபரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.தனது நுழைவுச்சீட்டை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரியொருவர் தமக்கு குறித்துரைக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சை எழுத வேண்டு மென்பதுடன், ஒவ்வொரு விண்ணப்பதாரியும் உரிய பரீட்சை மண்டபத்தில் பரீட்சை எழுதுகின்ற முதல் நாளில் மண்டப அதிபரிடம் கையொப்பத்தை உறுதிப்படுத்திய நுழைவுச்சீட்டை ஒப்படைத்தல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பரீட்சை தொடர்பாக பின்பற்ற வேண்டிய விதிகளின் தொகுப்பொன்று இவ்வறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

(இ) விண்ணப்பதாரியொருவருக்கு நுழைவுச்சீட்டு வழங்குதலானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதிகளை பூர்த்தி செய்துள்ளதற்கான அங்கீகாரமாக கருதப்படல் கூடாது.

(ஈ) பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட விதிகள் மீறப்படின் பரீட்சைகள் ஆணையாளரினால் விதிக்கப்படுகின்ற தண்டனையொன்றிற்கு உள்ளாதல் வேண்டியேற்படலாம்.

14. **விண்ணப்பதாரியின் அடையாளம் :**

பரீட்சை விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்காகவும் மண்டப அதிபர் திருப்தியடையக்கூடிய சுய அடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும்.அதற்காக கீழ் காட்டப்படும் எந்தவொரு ஆவணமும் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை;
II. செல்லுபடியான கடவுச்சீட்டு;
III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும் பரீட்சை விண்ணப்பதாரிகள் அடையாளத்தை உறுதி செய்து கொள்ளக்கூடியவாறு முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். அவ்வாறு தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கின்ற விண்ணப்பதாரிகள் மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.இன்னும் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்ததிலிருந்து பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமானவாறு முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காதிருத்தல் வேண்டும்.

15. **கவனிக்க வேண்டியவை :**

(அ) விண்ணப்பப்படிவத்துடன் எந்தவொரு ஆவணமோ அதன் பிரதியோ இணைக்கப்படலாகாது.
(ஆ) கேட்கப்படும் சந்தர்ப்பத்தில் ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

தற்போது அரசாங்க சேவையில் பதவியொன்றை வகிக்கின்ற சகல விண்ணப்பதாரிகளும் தமது திணைக்கள / நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும். அத்துடன் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தனது கையொப்பத்தை தான் சேவையாற்றும் நிறுவனத்தின் தலைவரைக் கொண்டு அத்தாட்சிப்படுத்திக் கொள்ளுதல் கட்டாயமாகும்.

16. **பெறுபேறுகளை வெளியிடுதல் :**

எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு தோற்றி தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளின் திறமைத் தொடரில் தயாரிக்கப்பட்ட, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவித்தலின் படி நிர்ணயிக்கப்பட்ட வெற்றிட எண்ணிக்கைக்கு சமனான எண்ணிக்கையான விண்ணப்பதாரிகளின் பெயர்கள் அடங்கிய பெறுபேற்று ஆவணம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரிடம் வழங்கப்படும்.

பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேறுகள் அறிவிக்கப்படும் அல்லது www.results.exams.gov.lk இணையத்தளத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்படும்.

17. **போலியான தகவல்களை வழங்குதல் :**

விண்ணப்பதாரியொருவர் தகைமையற்றவரென வெளிப்படுத்தப்படுமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எச்சந்தர்ப்பத்திலேனும் அவருடைய விண்ணப்பத்தை ரத்துச் செய்வதற்கு இடமுண்டு. விண்ணப்பதாரியொருவர் சமர்ப்பித்துள்ள யாதேனுமொரு விடயம் அது பொய்யானதென்பதை அறிந்தே சமர்ப்பித்திருப்பதாக வெளிப்படுத்தப்படின் அல்லது ஏதேனும் முக்கியமான விடயமொன்றை வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவர் அரச சேவையிலிருந்து பணிநீக்கம் செய்யப்படுவதற்கு இடமுண்டு.இவ்வொழுங்கு விதிகளில் கருதப்பட்டிராத விடயங்கள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

18. வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நிரப்பாமலிருப்பதற்குமான உரிமை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு உள்ளது.

19. சிங்களம்,தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் ஒவ்வொரு மொழி வெளியீட்டிலும் ஏதேனும் ஒவ்வாமை/பொருத்தமின்மைகள் ஏற்படின் சிங்கள மொழி மூல அறிவித்தல் வலுவானதாகும்.

செயலாளர்.

கடற்றொழில் அமைச்சு,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
2024.07.22.

07-687

---

**விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**
**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான
மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல்பரீட்சை - 2022 (2024)

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் I ஆம் தரத்தில் உள்ள அலுவலர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2024, ஒற்றோபர் மாத ஆரம்பத்தில் பேராதனையில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதன் பொருட்டு 2024.08.23 ஆம் திகதிக்கு இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் முதலாம் தரத்திற்கு பதவி உயர்வு பெற்றுள்ள அலுவலர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. **பரீட்சை தொடர்பான விபரம்** :- இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் சேவை பிரமானக் குறிப்பில் 08 ஆம் பந்தியின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய பரீட்சை தொடர்பான விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**பரீட்சை தொடர்பான விபரம் :**

| வினாப்பத்திரம் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| முகாமைத்துவம் | 3 மணித்தியாலம் | 100 | 40 |

03. பரீட்சையின் பொருட்டு பாடவிதானம் :

| வினாப்பத்திரம் | பாடத்திட்டம் |
|---|---|
| முகாமைத்துவம் | 1. முகாமைத்துவக் கோட்பாடுகள்<br>2. முகாமைத்துவச் செயற்பாடுகள்<br>3. முகாமைச் சூழல்<br>4. பங்குபற்றுகை முகாமைத்துவம்<br>5. பொது மக்கள் தொடர்பு கொள்கை<br>6. நல்லாட்சி<br>7. ஒழுக்கநெறி |

சித்தியடையும் பொருட்டு வினாப்பத்திரத்திற்கு ஆகக் குறைந்தது 40% புள்ளிகளை பெற்றுக் கொள்ள வேண்டும்.

04. இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் அமையப் பெறும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பம் செய்த மொழி மூலத்தை பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது.

05. விண்ணப்பப் பத்திரங்கள் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய $A^4$ தாளில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தில் தொடர் இலக்கம் 01 முதல் 06 வரை முதலாம் பக்கத்திலும் மீதி இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறும் தயாரிக்கப்படுதல் வேண்டும். அதற்கு உரிய தகவல்களை தமது சொந்த கையெழுத்தினால் மிகவும் தெளிவாக எழுதி நிரப்புதல் வேண்டும்.

06. அந்த விண்ணப்பத்தின் ஒளிப்படப்பிரதியை தம் வசம் வைத்திருப்பதானது பயன்மிக்கதாகும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பத்திற்கு அமைய அமைந்துள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு அமையாதவிடத்து அல்லது பூரணப்படுத்தப்படாத விண்ணப் பங்கள் அறியத்தராமலேயே நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தயார்படுத்துகையில் அங்கு தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் அதன் தலைப்பு தமிழிழும் ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

07. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை பிரமானக் குறிப்பிற்கு அமைய பரீட்சையை நடாத்தும் அதிகாரி கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் ஆவார். பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறு வெளியிடுவது தொடர்பில் கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிய வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற தேசிய மட்டத்தினாலான பரீட்சைகளின் பொருட்டு உரித்தாகின்ற சகல சட்ட ஒழுங்குவிதிகளும் இப்பரீட்சைக்கும் பொருந்தும். அவ்வொழுங்கு விதிகளை பின்பற்றாதவிடத்து கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுவர்.

08. விண்ணப்பங்கள் யாவும் 2024, ஓகத்து மாதம் 23 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கக் கூடியதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு திணைக்களத் தலைவரினூடாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
த. பெ. இலக்கம் 13,
கெட்டம்பே,
பேராதனை.

09. முதற்தடவையாக பரீட்சைக்கு அமருகின்ற விண்ணப்பகாரர்களிடம் இருந்து பரீட்சையின் பொருட்டு கட்டணம் அறவிடப்பட மாட்டாது. இரண்டாவது தடவையாக பரீட்சைக்கு அமருகின்ற உத்தியோகத்தர்கள் பரீட்சை கட்டணமாக ரூபா 600.00 செலுத்த வேண்டும். அந்த பரீட்சை கட்டணத்தை கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாகத்தின் வருமானத் தலைப்பு 2003-99-00 இற்கு வரவு வைக்குமாறு தீவில் அமையப் பெற்றுள்ள எந்தவொறு தபால்/ உபதபால் பணிமனையில் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டவும். மேலும் அதன் ஒளிப்படப் பிரதியை வைத்திருப்பதானது பயன்மிக்கதாகும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீள திருப்பிச் செலுத்தப்படமாட்டாது.

10. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் தீர்மானத்திற்கு அமைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பம் பெற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியவராயின் அதற்குரிய பற்றுச் சீட்டுடன் பரீட்சைக்கு அமரும் மொழி மூலம், விண்ணப்பகாரரது கையொப்பம் மற்றும் திணைக்கள தலைவரது சான்றிதழ் என்பவற்றுடன் சரியாக பூரணப்படுத்தி அனுப்பி வைத்துள்ள விண்ணப்பகாரர்களுக்கு கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பகாரருக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடனே அது தொடர்பில் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் மற்றும் திணைக்கள இணையதளத்தில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்றும் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய விண்ணப்பகாரரது முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொலைநகல் இலக்கம் அல்லது மின்னஞ்சள் முகவரி என்பன குறிப்பிட்டு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திற்கு உடனடியாக அறிவிக்க வேண்டும். அங்கு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் கேட்கப்படுகின்ற தேவையான தகவல்களை உறுதிப்படுத்தும் பொருட்டு நீங்கள் தன்வசம் வைத்திருக்கும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி பரீட்சை கட்டணம் செலுத்துவதாக இருப்பின் பற்றுச் சீட்டின் பிரதி விண்ணப்பம் பதிவுத்தபாலிட்ட பற்றுச் சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்து இருப்பது சிறந்ததாகும்.

11. மேலே 09 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பின் சமர்ப்பிக்கப்படும் எழுத்து மூலமான கடிதத் தொடர்புகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

12. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின் போது பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை பரீட்சை மண்டப பொறுப்பாளர் உறுதி செய்து கொள்ளும் பொருட்டு ஏற்றுக் கொள்ளப்படுவது தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட கடவுச் சீட்டு அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரம் மாத்திரமேயாகும். விண்ணப்பத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பகாரரது கையொப்பம் நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தயோகத்தரிடம் இருந்து சான்றுபடுத்தி இருக்க வேண்டும். விண்ணப்பகாரர் தமக்குரித்தான பரீட்சை மண்டபத்தில் உரிய சுட்டெண்ணின் கீழ் பரீட்சைக்கு அமருதல் வேண்டும். பரீட்சை தினமன்று தமது கையொப்பத்தை சான்றுபடுத்திக் கொண்ட அனுமதி அட்டையை பரீட்சை மண்டப பிரதானியிடம் கையளிக்க வேண்டும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத விண்ணப்பகாரர் பரீட்சைக்கு அமருவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

13. விண்ணப்பக்காரர் ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமைக் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

14. இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களுக்கிடையே மொழி மூலங்களில் ஏதாவது பொருந்தாத் தன்மை அல்லது வேறுபாடு காணப்படுமேயாயின், அவ்வேளையில் சிங்கள மொழிமூல அறிவித்தலே ஏற்புடையதாக அமையும்.

கலாநிதி கே. ஏ. சீ. எச். ஏ. கொத்தலாவல,
கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்.

2024.07.17.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**
**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான
மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2022 (2024)

**The 3rd EFFICIENCY BAR EXAMINATION FOR THE OFFICERS IN SRI LANKA ANIMAL PRODUCTION AND HEALTH SERVICE – 2022 (2024)**

(கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்பட்டு இருத்தல் வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4 (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

01 i) முழுப் பெயர் (ஆங்கில பேரெழுத்துக்களில்) :
(உதாரணம் HERATH MUDIYANSALAGE SAMAN KUMARA GUNAWARDHANA) :
.......................................................................................................................

ii) இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு பெயர் (ஆங்கில பேரெழுத்துக்களில்) (உதாரணம் GUNAWARDHANA H.M.S.K):
.......................................................................................................................

iii) முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்): ...................................................................

02. தபால் முகவரி ஆங்கில பேரெழுத்துக்களில் (அனுமதி அட்டை அனுப்பப்படுவதற்காக)
.......................................................................................................................
.......................................................................................................................

03. பால்
பெண் - 1 ☐
ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

04. தேசிய அடையாள அட்டை இலக்கம்:

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

05. தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

06. இதற்கு முன்னர் பரீட்சைக்கு தோற்றினீரா இல்லையா என்பதை குறிப்பிடுக. அவ்வாறாயின், ஆண்டு மற்றும் மாதம் என்பவற்றை குறிப்பிடுக. : ..........................................................................................

07. பிறந்த திகதி : வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

08. பதவிப் பெயர் : ...............................................................................
(ஆங்கில பேரெழுத்துக்களில்)

09. திணைக்களத்தின் பெயர் : ...............................................................
(ஆங்கில பேரெழுத்துக்களில்)

10. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் I ஆம் தரத்திற்கு நியமனம் பெற்ற திகதி : .................

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானது எனவும் விண்ணப்பத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சையை எழுதுவதற்கு உரிமையுள்ளது எனவும், மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பில் கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுவேன் எனவும் இத்தால் உறுதி மொழிகின்றேன்.

செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் : ரூபா .................

பணம் செலுத்தப்பட்ட பணிமனை : ....................... பற்றுச் சீட்டு இலக்கம் : .................

| பற்றுச்சீட்டினை ஒட்டுவதற்காக<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை வைத்துக் கொள்ளவும்) |
|---|

திகதி ................................................ ........................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

................................................................................ ஊடாக
கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல்.

இதனகத்துக் காணப்படும் விபரங்களையுடைய பரீட்சார்த்தி பரீட்சைக்கு தோற்றத்தகைமை உடையவர் என்றும், குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தில் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரிக்கு தகைமையுள்ளது எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

*விண்ணப்பக்காரர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை ஒட்டியுள்ளார் எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

பரீட்சார்த்தியினால் கையொப்பம் இடப்பட்டது எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

திகதி : ................................. ..........................................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிப் பெயரும்.
(அலுவலக முத்திரை)

*(கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் - விண்ணப்பதாரர் இணைப்புச் செய்யப்பட்டுள்ள அமைச்சு/ திணைக்களம்/ மாகாண சபை/நகரசபை/அலகு/தலைவர் ஒருவரால் சான்றுபடுத்தல் வேண்டும்)

07-688

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.